DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
Ragu Thillainathan Sales Representative homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Homelife/Future Realty Inc., Brokerage
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail : raj.p@rogers.com
என்னை அழையுங்கள்

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1518 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 9, 2025

## ஒன்றாரியோ மாகாண Red Tape Reduction அமைச்சின் பாராளுமன்றச் செயலாளரான மாகாண அரசின் உறுப்பினர் லோகன் கணபதி அவர்களைப் பாராட்டிய முதல்வர் டக் போர்ட்

அண்மையில் ஒன்றாரியோ மாகாணத்தின் **Red Tape Reduction** அமைச்சின்பாராளுமன்றச் செயலாளராக நியமனம் செய்யப்பெற்ற மாகாண அரசின் உறுப்பினர் லோகன் கணபதி அவர்களைப் பாராட்டிய முதல்வர் டக் போர்ட் அவர்கள் லோகன் கணபதி அவர்களின் சேவை மனப்பான்மையையும் அவரது தொகுதி மக்களுக்கும் ஒன்றாரியோ வாழ் மக்களுக்கும் அரிய சேவையாற்றும் ஒரு மாகாண அரசின் உறுப்பினராக எமது அரசாங்கத்தில் பதவி வகிப்பதைத் தான் பாராட்டுவதாகத் தெரிவித்துள்ளார்.

அன்றை பதவியேற்பு வைபவத்தில் சமூகமளித்த மேற்படி **Red Tape Reduction** அமைச்சரான அன்றியா அவர்களுக்கும் லோகன் கணபதி அவர்கள் தனது நன்றியையும் தெரிவித்து அவரது அமைச்சிற்கு தன்னாலான பங்களிப்பையும் வழங்குவதாகத் தெரிவித்தார்.

(தொடர்ச்சி 19ம் பக்கம்)



## Seven individuals honored at the International Press Freedom day celebrations in Toronto
## கனடாவில் "பல்லினப் பத்திரிகையாளர்கள் கழகத்தின்" அனைத்துலக ஊடகச் சுதந்திர தின "விழா"வில் எழுவருக்கு ஞாபகார்த்த விருதுகள்





கடந்த மே 2ம் திகதி கனடா ரொறன்ரோ மாநகரில் அமைந்துள்ள நகர சபையின் சபா மண்டபத்தில் கனடிய பல்லினப் பத்திரிகையாளர்கள் கழகம் ஏற்பாடு செய்திருந்த "அனைத்துலக ஊடகச் சுதந்திர தின விழாவில் கனடாவில் ஊடகத்துறையிலும் சமூகப் பணியிலும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிவரும் எழுவருக்கு விருதுகள் வழங்கப்பெற்றன.அவர்களில் கனடிய பல்லினப் பத்திரிகையாளர்கள் கழகத்தின் சிரேஸ்ட உறுப்பினர்களான **Dr. Mohammad Tajdolati - Honourgable Joe Vobe-Aris Babikian MPP** (தற்போதைய ஒன்றாரி யோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்) ஆகிய மூவரும் அடங்குவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. விருதுகளை கழகத்தின் தலைவர் **THOMAS SARAS** அவர்கள் வழங்கினார்கள். இங்கே உள்ள படங்களில் கழகத்தின் சிரேஸ்ட உப-தலைவர்களில் ஒருவரான ஆர். என்.லோகேந்திரலிங்கம் மற்றும் தமிழ் ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளும் காணப்படுகின்றனர் குறிப்பிடத்தக்கது.

UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL 2025
உதயன் சர்வதேச விருது விழா 2025
Music - Dance - Awards Presentation - Dinner
இசை - நடனம் - விருதுவழங்கல் - இராப்போசன விருந்து
Date/Time: Saturday, June 14th, 2025 at 6:00pm
Venue: The Estate Banquet & Event Centre
430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4
அனுமதிச்சீட்டுக்களுக்கு: 416-732-1608 அல்லது 647-762-9512

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடைவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East (2nd flr) Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
PRIME LEGAL SERVICES
905-334-6851



நாட்டுப்பற்றாளர் **திரு. மதிசூடி** நினைவரங்கத்தில்
உங்கள் அபிமான
**ஈழநாடு** பத்திரிகையின்

# 32 வது ஆண்டு விழா

கலைமாமணி டாக்டர்
## நித்யஸ்ரீ மகாதேவன்
வழங்கும்
## சங்கீத சங்கமம் 2025





ஈழத் தமிழினத்தின்
செஞ்சொற்செல்வர்
## ஆறு திருமுருகன்
அவர்கள் வழங்கும் சிறப்புரை
## வேர்களைத் தேடுங்கள்

இந்நிகழ்வு மூலம் சேகரிக்கப்படும் நிதி **கனடா தமிழ் சமூக மையத்திற்கும்** ஈழத்தின் அறப்பணியாளர் - செஞ்சொற்செல்வர் **ஆறு திருமுருகனது சமூகப் பணிக்கும்** ஈழநாடு வாசகர்கள் சார்பில் வழங்கப்படும்.

**அன்பளிப்பு** VIP | $100 | $50

என் இனிய உறவுகளே! ஓர் உயர்வான நோக்கத்திற்காகவும் - கனடிய மண்ணில் எமது அடையாளத்துக்காகவும் தாயக மண்ணில் எமது இருப்பை உறுதி செய்யவும் நடாத்தப்படும் இந்நிகழ்வு தொடர்பான இத்தகவலை உங்கள் முகநூல் மூலமாகவும் தனிப்பட்ட முறையிலும் உங்கள் நண்பர்களுக்கும் பகிர்ந்து உங்கள் ஆதரவை வழங்குங்கள்.

**SUNDAY**
**JUNE 01 2025**
**@5:30PM**

**METROPOLITAN CENTRE**
**3840 FINCH AVE EAST**
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)

தொடர்புகளுக்கு
**ஈழநாடு பரமேஸ்**
**416-841-9600**
eelanadu1993@gmail.com

**விழா 5.30 மணிக்கு ஆரம்பமாகும். 10.30 மணிக்கு நிறைவு பெறும். நேரடி ஒளி, ஒலி பரப்புக் கிடையாது.**

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00
பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள்
Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# எம். ஏ. சுமந்திரனின் வழிநடத்தலில் தமிழரசுக் கட்சி இயங்குமென்றால் தமிழர் அரசியலின் எதிர்காலம் பிரகாசிக்குமா?

இன்றா? அல்லது நாளையா? என்று பல ஆண்டுகளாக இலங்கை வாழ் வாக்காளப் பெருமக்களும் அரசியல் கட்சிகளும் எதிர்பார்த்துக் காத்திருந்த உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல் கடந்த 6ம் திகதி நடைபெற்று இன்று மூன்றாவது நாளைக் கடந்து செல்கின்றோம்.

இந்த மூன்று நாட்களும் இலங்கையில் மாத்திரமல்ல, உலகெங்கும் உள்ள தமிழர்களும் எமது மொழி சார்ந்த ஊடகங்களும் மௌனம் காப்பதும், ஊதித் தள்ளுவதுமாக வெவ்வேறு விதமாக கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட வண்ணம் நாட்கள் நகர்ந்து செல்லுகின்றன.

எனினும் முன்னாள் யாழ்ப்பாண அரசாங்க அதிபரும் கவிஞரும் அரசியல் அவதானியுமான அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அவர்கள் தனது முகநூல்ப் பக்கத்தில் குறிப்பிட்டவாறு "தமிழ் மக்கள் தவிர்க்க வேண்டியவர்களைத் தவிர்த்து வாக்களிக்க வேண்டியர்களுக்கு வாக்குகளை வழங்கி அவர்களை வெற்றியீட்டச் செய்துள்ளார்கள்" என்ற கருத்துக்களை ஏற்றுக்கொண்டவர்களும் மதிக்கின்றவர்களும் எவ்விதமான ஆர்ப்பாட்டமுமின்றி தங்கள் கருத்துக்களில் உறுதியாக உள்ளார்கள். எமது கனடா உதயன் ஆசிரிய பீடத்தினராகிய நாமும் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அவர்களது கூற்றை ஏற்றுக் கொண்டவர்களாகவே உள்ளோம் என்பதை இந்தப் பக்கத்தில் பகிர்ந்து கொள்கின்றோம். ஆனால் பலரது கேள்விகளில் முக்கிய ஒன்றாக இருப்பது தமிழர்களினதும் தமிழரசுக் கட்சியினதும் "எதிர்காலம்" எவ்வாறு அமையப்போகின்றது? என்பதே ஆகும்.


தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றோடு பின்னிப் பிணைந்து, தளர்ந்தும் நிமிர்ந்தும் ஏமாற்றங்களைத் தழுவியும். துரோகத்தனங்களுக்கு உள்ளாகியும் தமிழரசுக் கட்சியின் அரசியல் பாதையை கடந்த ஐம்பது வருடங்களாக அவதானித்தவர்கள் மத்தியில் எழுந்துள்ள கேள்வியே நாம் இங்கு குறிட்பிட்ட ஒன்றாக விளங்குகின்றது.

நடந்து முடிந்த தேர்தலுக்கு முன்பதாகவே தமிழரசுக் கட்சிக்குள் "குத்து வெட்டுக்களும்" "கழுத்தறுப்புக்களும்" இடம்பெற்று தற்போது நீதி மன்றங்களில் நிர்வாக விடயங்கள் தொடர்பான வழக்குகளை தன்னகத்தே கொண்ட ஒரு "கோட்டு கட்சியாகவே" தமிரசுக் கட்சி அதன் தொண்டர்களால் பார்க்கப்படுகின்றது.

மேலும், சுமந்திரன் மற்றும் சிறிதரன் சிவஞானம் போன்ற முக்கியமானவர்களுக்கு இடையில் தோன்றியுள்ள உள்ளக முரண்பாடுகள் கட்சியை சின்னாப்பின்னமாக்கிய நிலையில் இந்த உளளூராட்சித் தேர்தல் மூலம் வடக்கில் தமிழரசுக் கட்சியானது உலகெங்கும் உள்ள தமிழர்களின் மனதில் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்திய நிலையை அடைந்துள்ளது. எனினும் ஆங்காங்கே "நீறு பூத்த நெருப்பாக" உள்ள கட்சியின் எரியும் பிரச்சனைகள் எவ்வாறு தீர்க்கப்படப்போகின்றன என்பதே முக்கியமாகும். சிறிதரன் சிவஞானம் அவர்கள் கிளிநொச்சியில் தனது பலத்தைக் காட்டும் வகையில வாக்கு வங்கியை தனது கட்சிக்காக நிரப்பியிருந்தாலும் கட்சியில் அவரது தரமும் பலமும் தாழ்ந்துள்ளதாகவே கருதப்படுகின்றது. தற்போது எம். ஏ. சுமந்திரன் அவர்களால் கிளறப்படும் விடயங்களையும் குழப்பங்களையும் வெற்றி கண்டு கட்சியை சீரான பாதையில் நகர்த்திச் செல்லக் கூடிய பலம் சிறிதரன் சிவஞானம் அவர்களிடத்திலோ அன்றி அவரது அணியினரிடமோ உள்ளதாகத் தெரியவில்லை. எனவே தமிழரசுக் கட்சியின் பலத்தின் அதிகளவு சுமந்திரன் அணியினரையே சென்றடையும் என்ற எதிர்வும் தமிழர்கள் பிரதேசங்களில் பகிரப்பட்டு வரும் விடயமாக உள்ளது.

சுமந்திரன் அவர்கள் திறமையானவராக இருக்கலாம். ஆனால் அவரது கடந்த கால நகர்வுகள் இரட்டை வேடம் கொண்டவையாகவும் ரணில் விக்கிரமசிங்க போன்ற "கொலையாளிகளின்" நெருங்கிய நண்பர்களாகவும் காணப்படுவதால் அவரது தலைமையின் தமிரசுக் கட்சி இயங்குமானால் அந்த தலைமை தமிர்களின் இருப்பையும் அதே நேரம் தெற்கிலும் மீண்டும் ரணில் போன்ற ஓரங்கட்டப்பட்ட அரசியல்வாதிகளை உள்ளுக்குள் கொண்டு வந்து தென்னிலங்கை அரசியலையும் சீர்குலைக்கும் ஒரு ஆபத்தான அரசியலுக்குள் இலங்கையின் எதிர்காலம் சென்று விடும் என்ற எச்சரிக்கையையும் நாம் உதாசீனம் செய்துவிடக்கூடாது. எனினும் சிறிதரன் சிவஞானம் செல்வம் அடைக்கலநாதன் போன்ற அரசியல்வாதிகளும் இடதுசாரிப் போக்குக் கொண்ட தற்போதைய அரசாங்கத்தை வீழ்த்திவிட்டு தங்களுக்கு பல சலுகைகளைப் பெறக்கூடியு ரணில் போன்றவர்களின் ஆட்சி அமைவதையே விரும்புவார்கள் என்பதே உண்மை.

ஏனவே நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலின் வெற்றிகளை நிரந்தரமாக அனுபவிக்கும் வாய்ப்பை தமிரசுக் கட்சி தக்கவைக்குமா அன்றி ஏனைய தமிழ்த் தேசிய கட்சிகளிடம் தமிழர்களின் தலைமத்துவத்தை ஒப்படைப்பதா என்பதை தமிழர்கள் தீர்மானிக்க வேண்டும் என்பதையே எமது கதிரோட்டத்தின் வீச்சுக்களாக நாம் பதிவு செய்கின்றோம்.

MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728

Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing?
Secured Line of Credit?
Commercial Mortgages?
Are you ...
Self Employed?
Temporary Resident?
New Immigrant?

Not to Worry!
Please Call
Theven Kankesu
Mortgage Agent, FSCO Lic# M08008759
416.939.8789
tvn28@hotmail.com
thevenk1.tk@gmail.com

வேலை வாய்ப்பு
தையல் வேலைக்கு (saree blouse) பகுதி நேர அனுபவமுள்ள பணியாளர்கள் தேவை
இடம் Pickering
தொடர்புகொள்ள:
647-707-5263

Help Wanted
Workers needed for renovation company. Must have experience in one of the following:
- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno
Call - Siva
416-706-8160 or 416-893-3216

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மே 11 அன்று இலங்கையில் நடைபெறவுள்ள "தமிழ் ஹைக்கூ: நான்காவது உலக மாநாட்டு" ஆலோசனைக் கூட்டம் திருச்சியில் நடைபெற்றது

தமிழ் ஹைக்கூ கவிதையாளர்கள் இயக்கம், இனிய நந்தவனம் இதழ் மற்றும் கொழும்புத் தமிழ்ச் சங்கமும் இணைந்து நடத்தும் "தமிழ் ஹைக்கூ: நான்காவது உலக மாநாடு" வரும் 2025 மே 11 அன்று இலங்கையிலுள்ள கொழும்புத் தமிழ்ச் சங்க அரங்கில் ஒரு முழு நாள் விழாவாக நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டிற்கான ஆலோசனைக் கூட்டம் மே 1 அன்று திருச்சி கல்லுக்குழி புனித அந்தோணியார் தேவாலய அரங்கில் நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் "தமிழ் ஹைக்கூ: நான்காவது உலக மாநாட்டு"ப் பதாகையை புகழ்பெற்ற திரைப்பட இயக்குநர் சீனு.ராமசாமி வெளியிட, கவிஞரும் பாரதிதாசன் பல்கலைக்கழக செனட் உறுப்பினருமான கவிஞர் தங்கம் மூர்தேதி பெற்றுக்கொண்டார். நிகழ்வில், கல்வியாளர் சௌமா ராஜேந்திரன், மாநாட்டு ஆலோசகர் கவிஞர் மு.முருகேஷ், மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் நந்தவனம் சந்திரசேகரன், கம்பம் பாரதன், வதிலை பிரபா, அவனி ச.மாடசாமி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

இலங்கையில் நடைபெறவுள்ள மாநாட்டின் தொடக்க விழாவுக்கு இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஆலோசகரும், இலக்கியப் புரவலருமான அ.ஹாசிம் உமர் தலைமையேற்கிறார். ஊடகவியலாளர் கே.பொன்னுத்துரை வரவேற்புரையாற்றுகிறார்.

கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா, "தினகரன்" வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர், "வீரகேசரி" நாளிதழ் ஆசிரியர் ஸ்ரீகஜன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கவுள்ளனர்.

ஹைக்கூ கவியரங்கம், கருத்தரங்கம், அனுபவப் பகிர்வரங்கம், மாநாட்டு சிறப்பு மலர் வெளியீடு, ஹைக்கூ கவிதை நூல்கள் வெளியீடு ஆகிய நிகழ்வுகளில் தமிழகம், புதுச்சேரி, சிங்கப்பூர், மலேசியா, இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த கவிஞர்களும் ஆய்வாளர்களும் பங்கேற்கவுள்ளார்கள்.

1988-ஆம் ஆண்டிலேயே இலங்கையின் முதல் ஹைக்கூ நூலை எழுதிய கவிஞர் சு.முரளிதரனுக்கு "ஹைக்கூ பேரொளி" எனும் விருது வழங்கி கவுரவிக்கப்படவுள்ளார்.

இம்மாநாட்டில் தமிழகத்தைச் சேர்ந்த கவிஞரும் பாரதிதாசன் பல்கலைக்கழக செனட் உறுப்பினருமான கவிஞர் தங்கம் மூர்த்தி, சக்தி கார்ஸ் உரிமையாளரும் திரைப்படப் பாடலாசிரியருமான கவிமுகில், பால சாகித்திய புரஸ்கார் விருதாளரும் கவிஞருமான மு.முருகேஷ், "இனிய நந்தவனம்" இதழாசிரியரும் கவிஞருமான நந்தவனம் சந்திரசேகரன், பேராசிரியர் முனைவர் மு.செந்தில்குமார், கவிஞர்கள் ப.சொக்கலிங்கம், பா.தென்றல், அன்புத்தோழி ஜெயஸ்ரீ உள்ளிட்ட குழுவினர் பலரும் பங்கேற்க இருக்கிறார்கள்.

2022-ஆம் ஆண்டில் தமிழ் ஹைக்கூ முதலாவது மாநாடு திருச்சியிலும், 2023-இல் இரண்டாவது மாநாடு அந்தமானிலும், 2024-இல் மூன்றாவது மாநாடு மதுரையிலும் நடைபெற்ற நிலையில் தற்போது நான்காவது மாநாடு இலங்கையில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.



படக்குறிப்பு:

திருச்சியில் நடைபெற்ற ஹைக்கூ மாநாட்டுப் பயண ஆலோசனைக் கூட்டத்தில் இலங்கையில் நடைபெறவுள்ள "தமிழ் ஹைக்கூ: நான்காவது உலக மாநாட்டு"ப் பதாகையை புகழ்பெற்ற திரைப்பட இயக்குநர் சீனு.ராமசாமி வெளியிட, கவிஞரும் பாரதிதாசன் பல்கலைக்கழக செனட் உறுப்பினருமான கவிஞர் தங்கம் மூர்தேதி பெற்றுக்கொண்டார். அருகில், கல்வியாளர் சௌமா ராஜேந்திரன், மாநாட்டு ஆலோசகர் கவிஞர் மு.முருகேஷ், மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் நந்தவனம் சந்திரசேகரன் ஆகியோர் உடன் உள்ளனர்.

# நல்லை ஆதின முதல்வராக நற்பணி ஆற்றிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின் மறைவினால் இலங்கைச் சைவப்பெருமக்கள் ஆன்மீக பலம் கொண்ட வழிகாட்டியை இழந்து தவிக்கின்றனர்

## உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கனடாக் கிளை வெளியிட்டு அறிக்கை

யாழ்ப்பாணம் நல்லையம்பதியில் குடிகொண்டுள்ள கந்தப்பெருமானின் அருகாமையில் அவரை அரணாகக் கொண்டு, நீண்ட காலமாக நல்லை ஆதின முதல்வராக நற்பணி ஆற்றி வந்த ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின் மறைவினால் வட இலங்கை வாழ் சைவப்பெருமக்கள் ஆன்மீக பலம் கொண்ட வழிகாட்டியை இழந்தவர்களாக தவிக்கின்றனர். அத்துடன் வெளிநாடுகளிலிருந்து வருகின்ற அரசியல் மற்றும் சேவை நிறுவனங்களின்



தலைவர்களுக்கு தமிழர்களின் ஆன்மீக நம்பிக்கைகளையும் பண்பாட்டுக் கோலங்களையும் இனிதான மொழியில் எடுத்துரைத்து வந்த வட இலங்கைத் தமிழர்களின் ஆன்மீகத் தலைவரான ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின் இழப்பு ஒரு பாரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கனடாக் கிளை வெளியிட்டுள்ள இரங்கல் தெரிவிக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் மறைவு தொடர்பாக கனடாவைத் தலைமையகமாகக் கொண்ட உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் அவர்கள் தனது அனுதாபச் செய்தியில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"இலங்கையெங்கும் வாழ்கின்ற சைவப் பெருமக்களுக்கு மாத்திரமல்ல அனைத்து தமிழ் மக்களும் போற்றியும் மதித்தும் வந்த சைவப் பீடமொன்றின் தலைவராக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் அவர்கள் எமது தாயகத்தில் கடந்த போர்க் காலங்களில் பாதிக்கப்பட்ட அனைத்து மதங்களையும் சார்ந்த மக்களுக்காக பிராத்தனைகள் செய்வதையும் அவர்களின் உளக் காயங்களின் வலிகளை தணிக்கும் ஒரு ஆன்மீக வைத்தியராகவும் விளங்கியவர். அவரது தங்கியிருந்த ஆதினத்தில் என்னைப் பாராட்டும் வைபவத்தை தலைமை தாங்கி நடத்தி புலம் பெயர் தமிழர்களின் பணிகளையும் பாராட்டுவதில் உள்ள அக்கறையையும் அன்பையும் வெளிக்காட்டியவர். யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யும் வெளிநாட்டுத் தூதுவர்கள் கூட மறைந்த ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளையும் சந்தித்து ஆசிபெற்று அவரது உள்ளக்கிடக்கைகளாக வெளிவருகின்ற எமது மக்களின் துயரங்களின் பதிவுகளை செவிமடுத்துச் செல்லும் ஒரு தூதுவராகவும் விளங்கியவர். இவ்வாறான பன்முக ஆளுமையும் அன்பைவெளிக்காட்டும் பக்குவமும் கொண்ட ஒரு முதல்வர் எம் மக்கள் மத்தியில் ஒரு "முத்தாக" விளங்கியவர். அவரது மறைவையொட்டி உலகின் பல நாடுகளில் கிளைகளைக் கொண்டு இயங்கும் எமது இயக்கத்தின் சார்பிலும் கிளைத் தலைவர்களின் சார்பிலும் ஆயிரக்கணக்கான உறுப்பினர்களின் சார்பிலும் ஆழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்".


இவ்வாறு மேற்படி அனுதாபச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணம் வேலணையில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளரை தாக்கிய தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள்!



தேர்தல் நிலைமைகள் தொடர்பாக பிரதேசங்களில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளரைதேசிய மக்கள் கட்சியின் ஆதரவுக் குழு ஒன்று தாக்கிய சம்பவம் ஒன்று வேலணை துறையூரில் இடம்பெற்றுள்ளது.

6ம் திகதி செவ்வாய்க்கிழமை இலங்கையெங்கும் நடைபெறும் உள்ளூர் அதிகார சபை தேர்தல் தொடர்பில் வேலணை பிரதேசத்தின் கள நிலைவரங்களை செய்தி சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுட்டுக் கொண்டிருந்த வேளை வேலணை துறையூர் ஐயனார் வித்தியாலய வாக்காளர் மையத்தின் அருகே தேசிய மக்கள் கட்சியின் ஆதரவாளர்கள் இன்னொரு தரப்பு ஆதரவாளர்களுடன் கைகலப்பில் ஈடுபட்டிருந்த சம்பவத்தை வீடியோ செய்தியாக சேகரித்துக் கொண்டிருந்த போதே குறித்த தேசிய மக்கள் கட்சியின் குழு ஊடகவியலாளரை தாக்கியுள்ளது.




இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் ஊடகவியலாளரால் ஊர்காவற்றுறை பொலிசில் முறைப்பாடு செய்யப்படுள்ளது.

# யாழ்ப்பாண மாவட்டத்தில் வெறிச்சோடி காணப்படும் வாக்களிப்பு நிலையங்கள்!

## உள்ளூராட்சி மன்ற தேர்தலானது யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமுகமாக நடைபெற்று வருகின்றது

06.05.2025 அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை இதன்படி யாழ்ப்பாண மாவட்டத்தில் பி.ப 12.30 மணி நிலவரப்படி 34.48% வீதமான வாக்கு பதிவு இடம்பெற்றிருக்கின்றது என யாழ்ப்பாண மாவட்டச் செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.



வாக்களிப்பு மந்த கதியில் இடம்பெறுவதுடன் குறைந்தளவு வாக்காளர்களே வாக்களிப்பதை அவதானிக்க முடிகின்றது. இதனால் வாக்களிப்பு நிலையங்கள் வெறிச்சோடி காணப்படுகின்றது.



பி.ப 3.00 மணிக்கு பின்னர் வாக்களிப்பவர்களின் எண்ணிக்கை ஓரளவுக்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# "பொறுப்புக்கூறலை நடைமுறைப்படுத்தல், மனித உரிமைகளைப் பேணல், போன்ற விடயங்களில் ஐரோப்பிய ஒன்றிய நிபந்தனைகளை நிறைவேற்ற இலங்கை தவறினால் அதற்கு வழங்கி வரும் ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை விலக்கிக் கொள்ளலாம்"

## ஐரோப்பிய ஒன்றியக் கண்காணிப்புக் குழுவிடம் தெரிவித்திருக்கின்றது இலங்கைத் தமிழரசுக் கட்சி

இலங்கை தமிழரசு கட்சி
Ilangai Tamilarasu Katchi

"பொறுப்புக்கூறலை நடைமுறைப்படுத்துதல், மனித உரிமைகளைப் பேணுதல், நல்லாட்சியை முன்னெடுத்தல், நல்லிணக்கத்தை உருவாக்குதல் போன்ற விடயங்களில் ஐரோப்பிய ஒன்றிய நிபந்தனைகளை நிறைவேற்றும் கடப்பாட்டில்இலங்கை அரசு தொடர்ந்தும் தவறிழைக்குமானால் அதற்கு வழங்கி வரும் ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் விலக்கிக் கொள்ளலாம்."

இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியக் கண்காணிப்புக் குழுவிடம் நேரடியாகவும் பட்டவர்த்தனமாகவும் தெரிவித்திருக்கின்றது இலங்கைத் தமிழரசுக் கட்சி.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உயர்மட்டக் குழுவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் விசேட கண்காணிப்புக் குழுவுக்கு இடையில் 5ம் திகதி திங்கட்கிழமை இரவு 8 மணி முதல் சுமார் ஒன்றரை மணி நேரம் நடைபெற்ற சந்திப்பின்போது இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது நிலைப்பாட்டை ஐரோப்பிய ஒன்றியத்தின் விசேட கண்காணிப்புக் குழுவிடம் எடுத்து விளக்கியது.

தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையிலான இந்தக் குழுவில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், வைத்தியர் இ. சிறிநாத் ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் விசேட கண்காணிப்புக் குழுவில் அதன் உறுப்பினர்கள் ஐவரும், ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைத் தூதுவரும், பிரதித் தூதுவரும் நேற்றைய சந்திப்பில் பங்குபற்றினர். கொழும்பு, புல்லர்ஸ் வீதியில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இலங்கைக்குத் தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தால் வழங்கப்பட்டு வரும் விசேட ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை அடுத்த ஆண்டில் முடிவடைய இருக்கும் சூழலில், அதை நீடிப்பதா என்பது குறித்து ஆராயவே ஐரோப்பிய ஒன்றியக் குழு கொழும்பு வந்துள்ளது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குதல், இணையப் பாதுகாப்பு சட்டத்தை சீராக்குதல், நல்லாட்சி முறையைப் பேணுதல், பொறுப்புக்கூறலை நடைமுறைப்படுத்துதல், நியாயமான அதிகாரப் பகிர்வை முன்னெடுக்கும் விதத்திலான அரசமைப்பை உருவாக்குதல் என்பவை தொடர்பாக இலங்கை சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றாதமை குறித்து இந்தச் சந்திப்பில் தமிழரசுக் கட்சியினர் சுட்டிக்காட்டினர்.

சுமந்திரன் கூறியவை, "இந்த நாட்டின் பிரஜைகள் என்ற முறையில், பொருளாதார ரீதியில் நாட்டை மேம்படுத்தும் நோக்கில் நாட்டுக்கான வரிச் சலுகைகளைத் தொடர்ந்து வழங்க வேண்டும் என்று நாம் வலியுறுத்தி வந்தோம். அந்த வரிச்சலுகைகளை இலங்கை அரசுகள் பெற்றுக்கொண்ட போதிலும், கடைசியில் நாட்டைப் பொருளாதார வங்குரோத்திலேயே கொண்டு போய் நிறுத்தியுள்ளன. மறுபுறத்தில் இந்த வரிச்சலுகையைப் பெறுவதற்கான நிபந்தனைகளையும் அரசு நிறைவேற்றவில்லை. தொடர்ந்து இவ்வாறு அரசு முறையற்ற விதத்தில் - பொறுப்பற்றுச் செயற்படும்போது வரிச்சலுகையைத் தொடர்ந்து வழங்குங்கள் என்று நாம் கோருவது நியாயமற்றது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவது, பொறுப்புக்கூறலை நடைமுறைப்படுத்துவது, அதிகாரங்களை நீதி, நியாயமான முறையில் பகிர்வது, நல்லாட்சியைப் பேணுவது ஆகியவை தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் சர்வதேசத்துக்கும் தான் வழங்கிய உறுதிமொழிகளைத் தொடர்ந்து அரசு நிறைவேற்றவில்லை. உதாசீனப்படுத்தி வருகின்றது.

இப்படி ஏமாற்றுகரமான முறையில் இலங்கை அரசு தொடர்வதற்கு அனுமதிக்க முடியாது.ஒரு வறியவன் - கஷ்டப்பட்டவன் தன்குடும்பத்துக்கு உதவி என்று வந்து கேட்டால் நாங்கள் தினசரி அவனுக்கு உதவலாம். ஆனால், அப்படி உதவும் பணத்தை அவன் தன் குடும்பத்துக்கு உரிய முறையில் செலவிடாமல், தன் போதைக்கும் கீழ்த்தரமான நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்திக் கொண்டு, மறுபுறத்தில் தன் குடும்பத்தவர்களுக்கு அநியாயமான முறையில் தொல்லை கொடுப்பானாக இருந்தால் அவனுக்கு நாங்கள் தொடர்ந்து உதவி செய்ய முடியுமா? இத்தகைய நிலையில்தான் ஐரோப்பிய ஒன்றியத்திடம் உதவி பெறும் இலங்கை உள்ளது.

இலங்கை ஆட்சிப் பீடம் உங்களிடம் உதவி பெற்றுக்கொண்டு, மறுபக்கத்தில் நீதி செய்ய வேண்டிய தமிழர்களுக்கு அதைச் செய்ய மறுக்கின்றது. ஒரு புறம் ஐரோப்பிய ஒன்றிய வரிச்சலுகை வருமானத்தைப் பயன்படுத்திக் கொண்டு, மறுபுறம் தமிழ் மக்களின் தாயக பூமியைகபளீகரம் செய்யும் வேலைகளை முனைப்பாக முன்னெடுக்கின்றது. காணி பறிப்பைத் திட்டமிட்டு முன்னெடுக்கும் அநீதியை இழைக்கின்றது. அதிகாரப் பகிர்வை முன்னெடுக்க மறுக்கின்றது. பொறுப்புக்கூறலை நிலைநாட்டப் பின்னடிக்கின்றது.

நீதியையும், நல்லாட்சியையும், மனித உரிமைகளையும் நிலைநாட்டும் தனது கடப்பாட்டை இலங்கை நிறைவு செய்வதற்கான நிபந்தனைகளைக் காலம் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் விதிக்க வேண்டும். அந்த நிபந்தனைகளை இலங்கை அரசு நிறைவேற்றத் தவறினால் வரிச் சலுகையை விலக்கிக்கொள்வதில் எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. அப்படியான நடவடிக்கையை நாங்கள் வரவேற்போம்." - என்று சுமந்திரன் இந்தச் சந்திப்பில் தெரிவித்தார்.

தமிழருக்கு நீதி வழங்கப்பட வேண்டும், அதிகாரம் முறையான விதத்தில் பகிரப்பட வேண்டும் என்பவை தொடர்பில் இலங்கைக்குக் கடும் அழுத்தம் கொடுக்குமாறு இந்தச் சந்திப்பில் ஐரோப்பிய ஒன்றியத்தைத் தமிழரசுக் கட்சியினர் வலியுறுத்தினர் என்றும் தெரிகின்றது.



# தேசிய மக்கள் சக்தி எம்.பியான ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவனின் ஓய்வூதிய விண்ணப்பம் தொடர்பான சர்ச்சைகள் தொடர்கின்றன

இலங்கை செய்திகள் Sri Lanka News



- ந.லோகதயாளன்

யாழ்ப்பாண, மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி சார்பில் நாடாளுமன்றில் போட்டியிட்டு வெற்றியீட்டிய முன்னாள் அதிபர் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்திக்கு தவறான வழியில் - முறையற்ற வழியில் - ஓய்வூதியத்திற்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது என்ற விடயம் இப்போது வெளிவந்துள்ளது.

இது இப்போது அவரது நாடாளுமன்றப் பதவிக்கு ஆப்பாகக் கூடிய சாத்தியங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயத்தில் அதிபராகப் பணியாற்றிய ஜெ.றஜீவன் அதிபர் சேவை தரம் 11ஐச் சேர்ந்தவர். 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் திகதி இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஓர் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றியீட்டினார்.

அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிற்கு நேரடியாக அரசியலில் ஈடுபட முடியாது, என்றபோதும் தமது பதவியில் இருந்து விலகித் தேர்தலில் அவர்கள் போட்டியிட முடியும். அல்லது 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவைக் காலம் கொண்டவர்கள் வேட்புமனுத் தாக்கலுக்கு குறைந்தது 10 தினங்களிற்கு முன்பு தங்களைப் பணிக்கு நியமித்த நியமன அதிகாரிக்கு விண்ணப்பித்து, 7 தினங்களிற்கு முன்னர் ஒப்புதல் பெற்றால், ஓய்வூதியத்திற்கு விண்ணப்பிக்க முடியும் என நிர்வாக நடைமுறையின் 11 (உரோமன் இலக்க) சுற்று நிருபம் தெரிவிக்கின்றது.

அதாவது, றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி போன்ற அதிபர் பதவியில் இருப்பவர்கள் பதவியை விட்டுத் தாமாக விலகி - அதாவது பதவியைத் துறந்து - தேர்தலில் குதிக்கலாம். அல்லது முறையாக - சட்ட, ஒழுங்கு விதிகளில் உள்ளபடி - ஓய்வுக்கு விண்ணப்பித்து, நேர் சீரராக அனுமதி பெற்றுக் கொண்டு தேர்தலில் போட்டியிடலாம்.

அந்த இரண்டையும் அவர் செய்தாரா என்பதுதான் இப்பொழுது எழுந்துள்ள பிரச்சினை. அவர் தேர்தலில் இறங்க முன்னர் தாமாகப் பதவியையும் துறக்கவுமில்லை, முறையாக - ஒழுங்கு விதிப்படி ஓய்வு அனுமதி பெறவுமில்லை என்று இப்போது தெரிய வந்துள்ளது.

2024 ஆம் ஆண்டிற்கான நாடாளுமன்றத் தேர்தலின் வேட்பு மனுத் தாக்கல் ஒக்டோபர் 4 ஆம் திகதி ஆரம்பமாகி ஒக்டோபர் 11 ஆம் திகதி நிறைவடைந்தது. ஜெ.றஜீவன் ஒக்டோபர் 3 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மூலம் ஓய்வூதியத்திற்கு விண்ணப்பித்துள்ளார் என யாழ்ப்பாணம் வலயக் கல்வித் திணைக்களம் 2025-01-04 ஆம் திகதி அன்று, அதாவது 3 மாதங்களின் பின்னர் மாகாண கல்வித் திணைக்களத்திற்கு அறிக்கையிட்டுள்ளது.

ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவனின் ஓய்வூதியத்துக்கான பரிந்துரையை வலயக் கல்வி அலுவலகம் மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பியதற்கமைய மாகாணக் கல்வித் திணைக்களம் தமது சிபார்சுடன் 2025-01-24 அன்று 20 தினங்களில் மாகாண கல்வி அமைச்சிற்கு அதனை அனுப்பி வைத்துள்ளது. மாகாணக் கல்வித் திணைக்களத்தால் மாகாண கல்வி அமைச்சிற்கு அனுப்பிய கடிதத்தில் 2024-11-14 முதல் ஓய்விற்கு விண்ணப்பித்துள்ளார் என முரணான திகதியிடப்பட்டுள்ளபோதும் 2024-10-03 இல் இருந்து ஓய்வுபெற சிபார்சு செய்யப்படுவதாக மாகாண கல்விப் பணிப்பாளர் மாகாண கல்வி அமைச்சிற்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாகாண கல்வித் திணைக்களத்தின் சிபார்சிற்கு ஏற்ப 2025-04-04 இல் இரு மாத காலங்களின் பின்னர் மாகாணக் கல்வி அமைச்சானது உதவிச் செயலாளர், அதிபர் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்திரமுல்லைக்கு ஓய்வூதியத்திற்கு தமது சிபார்சுடன் சகல ஆவணங்களையும் அனுப்பி வைத்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் இரு தாதியர்கள் விடுமுறை எடுக்காது தேர்தல் வேட்புமனுவில் ஒப்பமிட்டமைக்காக பணியில் இருந்து இன்றுவரை இடை நிறுத்தப்பட்டுள்ளனர். அதற்கு முன்பு இடம்பெற்ற தேர்தல்களில் முறையாக அனுமதி பெறாமல் போட்டியிட்டமைக்காக கலாசார உத்தியோகத்தர் ஒருவர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் உள்பட ஐவர் பணியீல் இருந்து இன்றுவரை இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.


வவுனியாவில் இதே கட்சியில் போட்டியிட்ட ஆசிரியர் வெற்றியீட்டியதன் பெயரில் பணி விலகல் கடிதம் பெறப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியில் யாழ்ப்பாணத்தில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வான ஜெ.றஜீவன் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பு மனு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் 2024-10-10 அன்று கையளிக்கப்பட்டுள்ளது. சமாதான நீதவான் அந்த வேட்பு மனுவை 2024-10-09 இல் உறுதிப்படுத்தியுள்ளார்.

றஜீவன் அரசியல் உரிமை அற்ற ஓர் அதிகாரியான அதிபராக பணியாற்றியமையால் குறைந்தது வேட்பு மனுக் கையளிப்பிற்கு 10 தினங்களிற்கு முன்னர் நியமன அதிகாரிக்கு விண்ணப்பிக்க வேண்டும் என தேர்தல் சட்டம் மற்றும் சுற்று நிருபங்கள் கூறுகின்றது. அதிபர்களிற்கான நியமன அதிகாரி மத்திய கல்வி அமைச்சின் செயலாளர் என ஓர் தர்க்கமும் முன் வைக்கப்பட்டாலும், அதற்கும் அப்பால் முன்னாள் அதிபரான ஜெ.றஜீவன் நல்லூர் கோட்ட அதிகாரிக்கு 2024-10-03 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் வழங்கியதன் பெயரில் ஏழு தினங்கள் மட்டுமே கால அவகாசம் காணப்படுகின்றது. உரிய பத்துத் தினங்கள் இல்லை.

அத்துடன் ஓய்வுக்கான முறையான அனுமதியை குறைந்தது ஒரு வாரத்துக்கு முன்னராவது அவர் பெற்றிருக்க வேண்டும். இன்னும் கூட அதற்கான அனுமதி அவருக்குக் கிடைக்கவில்லை.

2024-10-03 ஆம் திகதியிடப்பட்ட ஜெ.ரஜீவனின் ஓய்வு விண்ணப்பக் கடிதத்திலும் நல்லூர் கோட்டத்தினர் தமது ஆர்வக் கோளாறு காரணமாக - 2024 ஒக்ரோபர் 03 ஆம் திகதி என்பதற்குப் பதிலாக - 2024 செப்ரெம்பர் 03 ஆம் திகதி என்றே திகதி முத்திரையைப் பொறித்து விட்டமை மேலும் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.


Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs

அதிபர் சேவையின் நியமன அதிகாரியான மத்திய கல்வி அமைச்சின் செயலாளரின் முகவரியும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்படவில்லை என்ற தர்க்கமும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவை அனைத்திற்கும் அப்பால் யாழ்ப்பாணம் வலயம், வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் வடக்கு மாகாண கல்வி அமைச்சு என்பன செம்மணி வீதியில் ஒரே வளவிற்குள் உள்ளபோதும் இவரது கோவை மத்திய கல்வி அமைச்சிற்கு அனுப்புவதற்கு 6 மாதங்கள் எடுத்துள்ளமை ஏன் என்ற விடயம் திணைக்களம் சார்பிலும் நியாயமான கேள்வி எழுவதற்கு காரணமாக அமைகின்றது.

தவிரவும், இந்த விடயங்கள் நோண்டப்படுகின்ற போது பாடசாலைக்கு அவர் கடைசியாக பணிக்கு சமுகமளித்த தினம் பரிசீலனைக்கு உள்ளாகும் என்பதும் கவனிக்கப்பட வேண்டிய விடயங்களாகும்.

# வடக்கு — கிழக்கில் தமிழ்த் தேசியத்தின் எழுச்சி: உள்ளூராட்சி தேர்தல்கள் முடிவுகள் ஏற்படுத்தியுள்ள அரசியல் திருப்புமுனை




06-05-2025 அன்று இலங்கையெங்கும் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் முடிவடைந்துள்ள வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் தேர்தல்கள் முடிவுகள் ஏற்படுத்தியுள்ள தமிழரின் அரசியல் விழிப்புணர்வில் ஒரு புதிய பரிணாமத்தை ஏற்படுத்தியுள்ளது. இது வெறும் தேர்தல் வெற்றியாக மட்டும் இல்லை தமிழ்த் தேசிய உணர்வின் மீளெழுச்சியாகவும் அமைகிறது. 2020 நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியுடன் இந்நிகழ்வை ஒப்பிடும் போது, இந்த வெற்றியின் முக்கியத்துவம் தெளிவாகிறது - இது எதிர்கால அரசியலுக்கான முக்கிய பாடமாக இருக்கிறது.

தோல்வியிலிருந்து வெற்றிக்குத் திரும்பிய பயணம்:

2020 நாடாளுமன்றத் தேர்தலின் போது, தமிழ்த் தேசியக் கட்சிகள் பெரும் பின்னடைவை சந்தித்தன. பல தமிழ் மக்கள், JVP/NPP போன்ற புதிய சக்திகளை ஆதரித்து, மாற்றத்தை எதிர்நோக்கியிருந்தனர். ஆனால் அந்த எதிர்பார்ப்புகள் வெறும் வார்த்தைகளாகவே போனது. அவர்கள் தமிழருக்கான சிறப்புரிமைகள், நீதி, விடுதலை குறித்து எந்தவிதத்திலும் உறுதியான நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை.

இன்றைய உள்ளூராட்சி தேர்தல் வெற்றி, மக்களின் அரசியல் புரிதலுக்கான திரும்பிப் பார்க்கும் தருணமாக அமைந்துள்ளது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் - பங்கு மற்றும் பொறுப்பு:

இந்த வெற்றி தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு ஒரு புதிய வாய்ப்பும், சுமந்த பொறுப்பும் வழங்குகிறது. எதிர்வரும் மாகாண சபை, பாராளுமன்றம் மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களை தமிழ்த் தேசியக் கட்சிகள் பலமாக ஒன்றிணைந்து சந்திக்க வேண்டிய காலநிலை இது.

2001-இல் "தலைவர்" உருவாக்கிய கூட்டமைப்பைப் போல, ஒரே தேசவாதக் குரலுடன் மக்கள் நம்பிக்கையை நிலைநிறுத்த வேண்டிய நேரம் இது.

ஜே.வி.பியின் பசப்பும் - தமிழரின் அரசியல் விழிப்பும்:

JVP/NPP இயக்கம், தமிழ் மக்களின் ஏமாற்றத்தைப் பயன்படுத்தி, பசப்பான வார்த்தைகள் மற்றும் பாசிடிவ் பிரச்சாரங்கள் மூலம் தமிழர்களின் ஓட்டுகளை ஈர்த்தது. ஆனால் அவர்கள் வாக்குறுதிகள் வெறும் காற்றாய் போனது.

இப்போது தமிழர்கள் அந்த வார்த்தைகளுக்குப் பின்னால் உள்ள வெற்று உண்மையை புரிந்து கொண்டுள்ளனர். வடக்கு-கிழக்குப் பொதுமக்கள் இனி அரசியல் கோரிக்கைகள் குறித்த தெளிவில்லாத சக்திகளை ஏற்க முடியாது. மீடியா பிரபலங்களாக இருந்தாலும், தமிழர்கள் இனி அத்தகைய அரசியல் பாசாங்குகளை நம்ப மறுக்கின்றனர்.

இந்த வெற்றி - எங்களே நம்மை ஆளவேண்டும் என்ற மக்கள் ஆணை:

இந்த வெற்றி, தமிழ் மக்களின் மனதில் பதிந்த ஒரு தெளிவான அரசியல் அறிவுப் பூர்வமான ஒப்புதல். "நாங்கள் நம்மையே ஆளவேண்டும்" என்பது இனி ஒரு முழக்கம் அல்ல - அது காலத்தின் தேவை. தமிழரின் மரியாதையும், உரிமையும் இப்போதே வலியுறுத்தப்பட வேண்டும்.

முடிவுரை:

வடக்கு-கிழக்குத் தேர்தல் முடிவுகள், தமிழ்த் தேசிய உணர்வின் மீளெழுச்சியாகவும், அரசியல் விழிப்புணர்வின் ஒளிப்படையாகவும் பார்க்கப்பட வேண்டும். இனி, தமிழ்த் தேசியக் கட்சிகள் தங்கள் உட்பிளவுகளை ஒதுக்கி, ஒன்றிணைந்து, தமிழரின் மொழி, அடையாளம், உரிமைகள் மற்றும் விடுதலைக்கான பாதையில் உறுதியுடன் முன்னேற வேண்டும். இது வரலாற்றுப் பொறுப்பும், காலத்தின் கட்டாயமுமாகும் - மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஈழத்து நிலவன் (07-05-2025)

கனடிய செய்திகள் Canadian News

# "ஈழத்தில் வாழும் சைவப் பெருமக்களுக்கு மாத்திரமல்ல ஒட்டு மொத்த தமிழர்களுக்குமான ஒரு அடையாளமாகவும் அதிகாரமாகவும் விளங்குகின்ற நல்லை ஆதினத்தை இதய சுத்தியுடன் பரிபாலனம் செய்தவர் இறைபதம் அடைந்த சுவாமிகள் அவர்கள்"

## மறைந்த நல்ல ஆதின முதல்வர் ஶ்ரீலஶ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளிற்கான அஞ்சலி நிகழ்வில் கனடா உதயன் பிரதம ஆசிரியர் புகழாரம்

"ஈழத்தில் வாழும் சைவப் பெருமக்களுக்கு மாத்திரமல்ல ஒட்டு மொத்த தமிழர்களுக்குமான ஒரு அடையாளமாகவும் அதிகாரமாகவும் விளங்குகின்ற நல்லை ஆதினத்தை இதய சுத்தியுடன் பரிபாலனம் செய்தவர் இறைபதம் அடைந்த சுவாமிகள் அவர்கள். அன்னாரது பணிக்காலத்தில் நல்லை ஆதினத்தை மக்கள் ஒரு மத பீடமாக மாத்திரம் பார்க்காமல் அதனை ஒரு சமூக பணியாற்றும் ஒரு உயர் பீடமாகவும் கணித்து வந்தார்கள்".

இவ்வாறு. மறைந்த நல்லை ஆதின முதல்வர் ஶ்ரீலஶ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளிற்காக கனடா ஸ்காபுறோ நகரில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் கனடா உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் புகழாரம் சூட்டினார்.

















மேற்படி அஞ்சலி நிகழ்வு கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. அதனை திருவாளர்கள் ஞானசெல்வம் மற்றும் கேதா நடராஜா உட்பட பலர் இரணந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

மேற்படி அஞ்சலி நிகழ்வினை சிவஶ்ரீ கோபி கிருஸ்ணா சர்மா தொகுத்து வழங்கினார்.

அங்கு உரையாற்றிய லோகேந்திரலிங்கம் தொடர்ந்து தனது உரையில் "யாழ்ப்பாணத்தின் ராஜதானியாக விளங்கிய நல்லூரில் இயங்கிவந்த நல்லை ஆதின முதல்வர்களை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யும் வெளிநாட்டுத் தூதுவர்கள் தவறாது சந்தித்துச் செல்வது ஒரு சம்பிரதாயமாகவும் ஒழுங்காகவும் மரபாகவும் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் இறைபதம் அடைந்த எமது சுவாமிகள் அவர்கள் வெளிநாட்டுத் தூதுவர்களிடம் எமது தமிழ் மக்களின் வலிகளைப் பகிர்ந்து கொள்ளத் தவறுவதில்லை. அவ்வாறு தனது சமயக் கடமைகளையும் சமூகக் கடமைகளையும் ஆற்றுவதில் வலலவராக இருந்தார் எமது மறைந்த நல்லை ஆதின முதல்வர் ஶ்ரீலஶ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்" என்று குறிப்பிட்டார்.

அங்கு உரையாற்றிய அனைவரும் நல்லை ஆதினத்தின் பணிகளையும் மறைந்த நல்லை ஆதின முதல்வர் ஶ்ரீலஶ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின் அர்ப்பணிப்புக்களையும் எடுத்துரைத்தனர். அவர் தனத உடல்நலத்தைக் கூட கவனிக்காமால் இன்னும் பல ஆண்டுகள் பணி செய்யக்கூடிய வயதும் வாய்ப்புக்களும் நிறைந்திருந்தாலும் அவரை நாம் இழக்க வேண்டிய காலம் அவரை மறைத்து விட்டது" என்று குறிப்பிட்டார்கள்.


# Thana Insurance Inc

T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker

THANA INSURANCE Inc.



Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road , unit D218, Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் உணர்த்துவது?



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் கிடைத்த பின் முல்லைத்தீவில் இருந்து ஒரு தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர் முகநூலில் பின்வருமாறு எழுதினார் "முல்லைத்தீவு ரவிகரனோடு, கிளிநொச்சி சிறீயரோடு" என்று. அதற்கு கிளி நொச்சியைச் சேர்ந்தவரும் முன்பு பிரதேச சபை உறுப்பினராக இருந்தவரும், இப்பொழுது சுதந்திரனுக்கு தீவிர விசுவாசியுமான ஒருவர் பதில் எழுதினார் "யாழ்ப்பாணம் சுமந்திரனோடு" என்று.

இந்த மூன்று கருத்துக்களும் கட்சியின் ஆதரவாளர்களுடைய கருத்துக்களாக இருந்தாலும் அவை தமிழ் அரசியலில் குறுக்கு வெட்டுமுகத் தோற்றத்தை ஓரளவுக்குக் காட்டுபவை. உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் தமிழ்த் தேசியக் கட்சிகளைப் பொறுத்தவரையிலும் இரண்டு முடிவுகளைத் தெளிவாக உணர்த்தியுள்ளன. முதலாவது, அவை ஒற்றுமையின்மையை பிரதிபலிக்கின்றன. இரண்டாவது ஒற்றுமைப்பட்டால் வெற்றி பெறலாம் என்ற நம்பிக்கையைப் பிரதிபலிக்கின்றன.

தேர்தல் முடிவுகளின்படி தமிழரசுக் கட்சி பரவலாக வெற்றி பெற்றிருக்கிறது. அது எதிர்பார்க்கப்பட்ட ஒன்று. வடக்குக் கிழக்காக கிளைகளைக் கொண்டுள்ள, வடக்குக் கிழக்காக கீழ்மட்டத் தொண்டர் வலையமைப்புகளைக் கொண்டுள்ள, ஒப்பீட்டளவில் பெரிய கட்சி அது.எனவே அது அதிக ஆசனங்களை வெல்லும் என்பது ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட ஒன்று. எனினும் அதிக சபைகளை அவர்களால் கைப்பற்ற முடியுமா இல்லையா என்பது இக்கட்டுரை எழுதப்படும் வரையிலும் உறுதிப்படுத்த முடியவில்லை. தேர்தல் முடிந்த கையோடு கட்டுரை எழுதப்படுகிறது.

கிளிநொச்சியில் சிறீதரன் பெற்ற வெற்றி அங்கு அவர் எவ்வளவு பலமாக உள்ளார் என்பதனைக் காட்டியுள்ளது. அதாவது சிறீதரன் தன் பலத்தை அங்கே நிரூபித்திருக்கிறார். அதற்கு வேறு ஒரு விளக்கமும் உண்டு. சுமந்திரனுக்கு தன்னுடைய பலம் என்ன என்பதனை சிறீதரன் அங்கே காட்டியிருக்கிறார். அது போலவே கட்சியின் செயலாளராக, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நோக்கி கடுமையாக உழைத்த சுமந்திரனும் ஏனைய சபைகளில் தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்த ஆசனங்களைத் தொகுத்துக் காட்டி தமிழரசுக் கட்சி தமிழர் தாயகத்தில் முன்னணியில் நிற்கிறது என்று கூறுகிறார். அந்த வெற்றிக்கு அவரே மறைமுகமாகப் பொறுப்பேற்கிறார். அதன்படி கட்சியின் வெற்றி அவருடைய வெற்றியும் தான். அதாவது தமிழரசுக் கட்சிக்குள் சுமந்திரனின் பிடியை தேர்தல் முடிவுகள் மேலும் பலப்படுத்தியிருக்கின்றன என்று பொருள்.

ஆயில் கட்சிக்குள் இரண்டு தலைமைப் போட்டியாளர்களின் பிடியும் பலமாக இருப்பதை தேர்தல் முடிவுகள் நிரூபித்திருக்கின்றன. எனவே இரண்டு அணிகளும் தொடர்ந்தும் கட்சியை இரண்டாக வைத்திருக்கப் போகின்றனவா? கட்சி நீதிமன்றத்தில் இருந்து வீட்டுக்கு வரப்போவதில்லையா?

இந்தப் பிரிவுகளின் விளைவாகத்தான் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்கு பின்னடைவு ஏற்பட்டது. அந்தப் பின்னடைவிலிருந்து கற்றுக் கொண்டதனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு புதிய கூட்டை உருவாக்கியது. அந்தக் கூட்டு குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேறியிருக்கிறது. சில சபைகளைக் கைப்பற்றியிருக்கிறது. ஆனால் அது தமிழரசுக் கட்சியின் இடத்தைக் கைப்பற்றக்கூடிய ஒரு வெற்றி அல்ல. எனவே உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளின்படி தமிழ் அரசியலில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய பெரிய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றனவா? தமிழ்க் கட்சிகள் கிடைத்த வெற்றியில் இருந்து கற்றுக்கொள்ளுமா?

தேர்தல் அரசியலுக்குள்ளால் பார்த்தால் தமிழரசுக் கட்சி அதன் வெற்றியை கொண்டாடும். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் கொண்டாடும். ஒற்றுமையின் பலத்தை முன்னணி இப்பொழுது சுவைக்கத் தொடங்கியிருக்கிறது. இந்த ஒற்றுமையை அடுத்தடுத்த கட்டத்துக்கு வளர்த்து செல்வார்களாக இருந்தால் இதைவிடப் பலமான ஒரு கூட்டை அவர்கள் கட்டி எழுப்பலாம்.

மிதவாத அரசியலில் புனிதமான கூட்டுக்கள் எவையும் கிடையாது. எல்லாமே தந்திரோபாயக் கூட்டுக்கள்தான். கொள்கைத் தெளிவு உடைய தரப்புகள் தலைமைப் பொறுப்புகளில் இருந்தால் போதும். அதில் யாரை இணை த்துக் கொண்டாலும் அந்தக் கூட்டு கொள்கை வழியில் முன் செல்லும். இங்கு பிரச்சனை தலைமைப் பொறுப்பு யாரிடம் இருக்கிறது என்பதுதான். எனவே முன்னணி அது உருவாக்கியிருக்கும் தமிழ்த் தேசியப் பேரவையை அடுத்தடுத்த கட்டங்களுக்கும் விரிவு படுத்த வேண்டும். தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவதற்கு உரிய புதிய உபாயங்களைக் கண்டுபிடிக்க வேண்டும்.

பருத்தித்துறையில் நடந்த முன்னணியின் பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய கஜேந்திரகுமார் இந்த தேர்தல் ஏன் தமிழ் மக்களின் தலைவிதையைத் தீர்மானிக்கும் ஒரு தேர்தல் என்ற கேள்விக்கு விளக்கம் கொடுத்திருந்தார். அவருடைய விளக்கத்தின்படி நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்த வெற்றிகளை வைத்து என்பிபி தமிழ் மக்கள் தனக்கு ஆணை வழங்கியிருக்கிறார்கள் என்று உலகப்பரப்பில் சொல்லி வருகிறது. இந்நிலையில் அந்த வெற்றியை உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் உறுதிப்படுத்துவார்களாக இருந்தால் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கட்சிகளை விட்டு நீங்கி என்பிபியின் பக்கம் வந்துவிட்டார்கள். எல்லாரும் இலங்கையர்கள் என்ற என்பிபியின் கோ'த்தை ஏற்றுக்கொள்கிறார்கள் என்று அது வியாக்கியானப்படுத்தப்படுத்தும். அதாவது தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசமாக, தேசிய இனமாகக் கருதவில்லை என்று என்பிபி கூறுவது மீண்டும் ஒரு தேர்தலில் உறுதிப்படுத்தப்பட்டு விடும். என்றபடியால் இத்தேர்தலில் தமிழ் மக்கள் வழங்கும் தீர்ப்பு தமிழ்த் தேசியத்தின் தலைவிதியைத் தீர்மானிப்பது என்ற பொருள்பட கஜேந்திர குமார் உரையாற்றியிருந்தார்.

ஓர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எவ்வாறு தமிழ்த் தேசியத்தின் தலைவிதியைத் தீர்மானிக்கும் ஒரு தேர்தலாக மாறியது?

அதற்குத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும் பொறுப்பு. பொருத்தமான வீரத்தில் அதாவது பொருத்தமான தேர்தலில் பொருத்தமான முடிவுகளை அவர்கள் எடுக்கத் தவறினார்கள். ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை முன்னிறுத்திய அணியச் சேர்ந்த ஒரு சிவில் சமூக செயல்பாட்டாளர் கூறுவது போல அவர்கள் "சரியான நேரத்தில் பிழையான முடிவுகளை எடுத்தார்கள். பிழையான நேரத்தில் சரியான முடிவுகளை எடுத்தார்கள்".

ஜனாதிபதித் தேர்தலில் அவர்கள் பொருத்தமான முடிவை எடுத்து இருந்திருந்தால் அங்கிருந்து அவர்கள் வெற்றி பெறத் தொடங்கி இருந்திருப்பார்கள். அந்த வெற்றியானது தமிழரசு கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பிளவையும் வெற்றிகரமாகக் கையாண்டு இருந்திருக்க முடியும்.

ஆனால் பொது வேட்பாளரின் விடயத்தில் முன்னணி தொடக்கத்தில் இருந்தே எதிர்ப்புக் காட்டியது. பொது வேட்பாளரை ஆதரித்தவர்களை இந்தியாவின் ஏஜென்ட்கள் என்று பட்டம் சூட்டியது. ஆனால் தேர்தல் முடிவுகள் வெளிவந்ததும் பொது வேட்பாளருக்கு கிடைத்த வாக்குகள் தேசியத் தன்மை மிக்கவை என்று கூறியது.

இப்பொழுது முன்னணி உருவாக்கி வைத்திருக்கும் கூட்டுக்குள் முன்பு பொது வேட்பாளரை முன்னிறுத்திய தரப்புகள் தான் இணைந்திருக்கின்றன. அவர்கள் கொள்கைத் தெளிவு உடையவர்கள். கூட்டுக்கு வெளியே இருப்பவர்கள் கொள்கைத் தெளிவற்றவர்கள் என்று முன்னணி கூறக்கூடும். ஆனால் பிரச்சனை என்னவென்றால், ஜனாதிபதித் தேர்தலில் சரியான ஒரு முடிவை எடுத்து இருந்திருந்தால் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் வாக்குகள் அப்படிப் பார தூரமாகச் சிதறும் ஒரு நிலைமை ஏற்பட்டிருக்காது. சுயேட்சைகள் அந்த அளவுக்கு கிளம்பும் ஒரு நிலைமை வந்திருக்காது. அதன் விளைவாகத்தான் தேசிய மக்கள் சக்திக்கு யாழ்ப்பாணத்தில் மூன்று ஆசனங்கள் கிடைத்தன தமிழரசு கட்சிக்கு குடா நாட்டுக்குள் ஒரு ஆசனமும் கிடைக்காமல் போனது.

எனவே தமிழ் மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் தருணங்கள் இதற்கு முன்னரும் வந்தன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அந்த நிர்ணயகரமான தருணங்களைச் சரியாக எடை போட்டு, பொருத்தமான முடிவுகளை எடுக்கத் தவறியது. தங்களைக் கொள்கைப் புனிதர்களாக அவர்கள் எப்பொழுதும் கூறிக் கொண்டார்கள். ஆனால் மிதவாத அரசியலில் கொள்கைப் புனிதம் என்பதே நடைமுறையில் கிடையாது. 100% சுத்தமானது, 22 கரட் தங்கம் என்றெல்லாம் மிதவாத அரசியலில் பேச முடியாது. இருப்பவற்றில் தரமானது, இருப்பவற்றில் தூ ய்மையானது, இருப்பவற்றில் பொருத்தமானது, என்றுதான் எதையும் தேர்ந்தெடுக்கலாம். கூர்ப்பின் விதியும் அதுதான். தக்கன பிழைக்கும்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தக்க ஒரு முடிவை எடுத்திருக்கிறது. தக்க ஒரு கூட்டை உருவாக்கியிருக்கிறது. இந்தக் கூட்டை எதிர்காலத்தில் அடுத்தடுத்த கட்டங்களுக்கும் விரிவுபடுத்துவார்களாக இருந்தால் தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் உடைவினால் எதிர்காலத்தில் அந்தக் கட்சிக்குள் ஏற்படக்கூடிய விளைவுகளையும் அவர்கள் வெற்றிகரமாகக் கையாளலாம்.

குறிப்பாக, யாழ்.மாநகர சபையை பொறுத்தவரையிலும் அங்கே எந்த கட்சி வெற்றி பெறுகிறதோ அது ஒரு குறியீட்டு வெற்றி. யாழ்ப்பாணம் எனப்படுவது தமிழ் மக்களின் பண்பாட்டுத் தலைநகரங்களில் ஒன்று. அந்த மாநகர சபையில் யார் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறார்கள் என்பது ஒரு குறியீடு. அந்த நகர முதல்வருக்கு அதிகம் முக்கியத்துவம் உண்டு. ஆனால் அவ்வளவு முக்கியத்துவம் மிக்க அந்த நகர சபையை திருப்திப்படும் பெரும்பான்மையோடு கைப்பற்ற எந்த கட்சியாலும் முடியவில்லை என்பது தமிழ் ஒற்றுமையின்மையின் விளைவு தான்.

குறைந்தபட்சம் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் தங்களுக்கு இடையே போட்டித் தவிர்ப்பு உடன்படிக்கை எதற்காவது போயிருக்கலாம். அவ்வாறான உடன்படிக்கை ஒன்றைச் செய்யுமாறு பல்வேறு தரப்புக்களும் அவர்களுக்கு வலியுறுத்தினார்கள். ஆனால் யாருமே அதைக் கண்டுகொள்ளவில்லை.

தமிழரசுக் கட்சி, தான் தனித்து நின்று வெல்லும் என்று கருதியது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கொள்கைக் கூட்டு மட்டுமே என்று கூறியது. விக்னேஸ்வரனின் கட்சிக்குள் மணிவண்ணன் முதன்மை பெற்றிருப்பதனால் அக்கட்சியானது தமிழ் தேசிய மக்கள் முன்னணியை நெருங்கிவர முடியவில்லை. தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் அதை நெருங்கி வர முயற்சிக்கவில்லை. சங்குக் கூட்டணிக்குள் சந்திரகுமாரை இணைத்துக் கொண்டதனால் ஏனைய தமிழ்த் தேசிய கட்சிகள் அந்தக் கூட்டுக்குள் இணைய யோசித்தன.

இப்படிப்பட்டதோர் பின்னணியில் சில கட்சிகளின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப் பட்டமையும் தமிழரசுக் கட்சிக்கு வாய்ப்பாக அமைந்தது. முன்னணிக்கும் ஓரளவுக்கு வாய்ப்பாக அமைந்தது.

யாழ்.மாநகர சபையில் மான் கட்சியின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட பொழுது அக்கட்சியை சேர்ந்தவர்கள் மறைமுகமாக வீட்டுக்கு வாக்களிக்குமாறு கேட்டார்கள். சைக்கிளுக்கு அல்ல. ஏனெனில், மான் கட்சிக்குள் மணிவண்ணன் இருப்பதால் அக்கட்சி கஜேந்திரகுமாரை ஆதரிக்கவில்லை. அதுபோல தமிழ்த் தேசிய பேரவைக்குள் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் வேட்பு மனுக்கள் நல்லூர் பிரதேச சபையில் நிராகரிக்கப்பட்ட பொழுது அக்கட்சியானது தன் ஆதரவாளர்களிடம் தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்குமாறு கேட்டது. மான் கட்சிக்கு அல்ல. ஏனென்றால் மணிவண்ணனுக்கும் ஐங்கரநேசனுக்கும் இடையில் உடன்பாடு இல்லை.

**(தொடர்ச்சி 15 பக்கம்)**

# தென்னிலங்கை கொலைகள் மலிந்த பூமியாக மாறிவிட்டதா?

இலங்கை செய்திகள் Sri Lanka News

## அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்குள் இறந்த அசங்க இந்துனிலின் "மண்டை ஓடு சேதமடைந்திருந்தது"



அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்குள் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்த நபரின் மரணம் தாக்குதலினால் ஏற்பட்டிருக்கலாம் என அவரது உறவினர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இறந்த அசங்க இந்துனிலின் உறவினர்கள், அவருக்கு நடத்தப்பட்ட பிரேத பரிசோதனையின் போது அவரது மண்டை ஓடு சேதமடைந்திருந்ததை வைத்தியசாலை ஊடாக அறிந்துகொண்டுள்ளதாக கைதிகளின் உரிமைகளுக்காக வாதிடும் நாட்டின் முன்னணி அமைப்பு தெரிவித்துள்ளது.

சிறைக்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான குழுவின் நிர்வாக பணிப்பாளர் சடடத்தரணி சேனக பெரேராவின் கூற்றுக்கு அமைய, 45 வயது ஜயசேகர ஆராச்சிகே அசங்க இந்துனில் எம்பிலிபிய, தனது நண்பருக்கு பிணை வழங்க ஏப்ரல் 30 அன்று நீதிமன்றத்திற்குச் சென்றிருந்தார்.

நீதிமன்றத்திற்குள் அசங்க இந்துனிலின் கைத்தொலைபேசி ஒலித்தது. அவர் கைது செய்யப்பட்டபோது பாதுகாப்பு அதிகாரிகள் அவரது சட்டைப் பையில் ஒரு லைட்டரையும் (lighter) கண்டுபிடித்தனர்.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் அசங்க இந்துனிலை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டதாகவும், பிணை வழங்கச் சென்ற அசங்க இந்துனிலும் அவரது நண்பரும் அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டதாகவும் சட்டத்தரணி சேனக பெரேரா கூறுகிறார்.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் பேரில் ஜெயசேகர ஆராச்சிகே அசங்க இந்துனில் 30-04-2025 அன்று காவலில் வைக்கப்பட்டு அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும், சந்தேகநபருக்குப் பொறுப்பான அதிகாரிகள், சந்தேக நபர் "திடீரென ஏற்பட்ட கடுமையான நோய்" காரணமாக சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், மே 2, 2025 மாலை இறந்துவிட்டதாகத் தெரிவித்ததாகவும், 2025 மே 2ஆம் திகதி இரவு 10 மணிக்கு எம்பிலிபிட்டிய பொலிஸ் தலைமையகத்தின் பொலிஸ் ஆய்வாளருக்கு அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலை கண்காணிப்பாளர் வழங்கிய தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனைக்குப் பின்னர், இறந்தவரின் உறவினரான கலகம முல்லகேவைச் சேர்ந்த லசித் சுரங்கவிடம் உடல் ஒப்படைப்பதற்கு, ஹம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றம் மே 3 ஆம் திகதி ஹம்பாந்தோட்டை வைத்தியசாலையின் சிறு சேவைகள் கட்டுப்பாட்டாளருக்கு உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இந்த மரணம் ஒரு தாக்குதலால் ஏற்பட்டதாக சந்தேகிக்கும் அசங்க இந்துனிலின் உறவினர்கள், அவரது மண்டை ஓடு சேதமடைந்துள்ளதாக பிரேத பரிசோதனையின் போது வைத்தியசாலை ஊடாக அறிந்ததாகக் கூறுகின்றனர்.

இறந்த தங்கள் உறவினர் சிறையில் தாக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிப்பதாகவும், அசங்க இந்துனிலின் நண்பரும் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர்கள் பிரதேச ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளனர்.

அசங்க இந்துனிலின் மரணத்திற்கு காரணமான அனைவரையும் உடனடியாக கைது செய்யக் கோரும் சிறைக்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான குழுவின் நிர்வாகப் பணிப்பாளர், சட்டத்தரணி சேனக பெரேரா, 2019ஆம் ஆண்டில் அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் குழு ஒன்று தடிகளால் தாக்கப்படுவதை காட்டும் பல சிசிடிவி காட்சிகளை தனது அமைப்பு வெளியிட்டுள்ளதாகவும், ஆனால் இதுவரை இது தொடர்பாக சரியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் வலியுறுத்துகிறார்.

ஊடகங்கள் மீது கட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலம் ஜயசேகர ஆராச்சிகே அசங்க இந்துனிலின் மரணத்தை மறைக்க ஒரு பெரிய முயற்சி மேற்கொள்ளப்படுவதாக மனித உரிமைகள் சட்டத்தரணி மேலும் குறிப்பிடுகின்றார்.

பொலிஸ் விசாரணைகளுக்கு மேலதிகமாக, சம்பவம் தொடர்பாக சிறைச்சாலைகள் திணைக்களத்தாலும் விசாரணை நடத்தப்பட்டு வருவதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் காமினி பி. திசாநாயக்க ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

# பாராளுமன்றத் தேர்தல் முடிந்து 6 மாதங்கள் கடந்த நிலையில் உள்ளூராட்சித் தேர்தலில் வடஇலங்கை மக்கள் தவிர்க்கவேண்டியவர்களைத் தவிர்த்து தேர்வு செய்யவேண்டியவர்களைத் தேர்வு செய்துள்ளார்கள்



## முன்னாள் யாழ்ப்பாண அரசாங்க அதிபரும் கவிஞருமான சிவபாலசுந்தரனின் கருத்துப் பதிவு

பாராளுமன்றத் தேர்தல் முடிந்து 6 மாதங்கள் கடந்த நிலையில் 6ம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் வடஇலங்கை மக்கள் தவிர்க்கவேண்டியவர்களைத் தவிர்த்து தேர்வு செய்யவேண்டியவர்களைத் திறம்படத்தேர்வு செய்துள்ளார்கள் என முன்னாள் யாழ்ப்பாண அரசாங்க அதிபரும் கவிஞருமான சிவபாலசுந்தரனின் தனது முதநூல்ப் பக்கத்தில் கருத்துப் பதிவுசெய்துள்ளார்.

மேற்படி பதிவில் அவர் பின்வருமாறு தெரிவிக்கின்றார், "பாராளுமன்றத்தேர்தல் முடிவுகளுக்கும் உள்ளூராட்சித்தேர்தல் முடிவுகளுக்கும் ஒரு ஒற்றுமை இருப்பதைக்காண்பீர்!

பாராளுமன்றத்தேர்தலில் வடக்கில் தமிழ்த்தேசியக்கட்சிகளின் செயற்பாடுகள் மீதுகொண்ட அதிருப்தி காரணமாக திசைகாட்டியையும் ஊசியையும் வெல்லவைத்தார்கள்.

அதன்விளைவாக அரசியல் அனுபவமற்ற, அரசியல் நாகரிகம் பேணாத, இன உணர்வு சிறிதுமற்ற, நூலிலாடும் பொம்மைகள்போன்ற பிரதிநிதிகள் தெரிவாகும் நிலை ஏற்பட்டது. இதன் விளைவை அனுபவித்த மக்கள் தற்போது உள்ளூராட்சித் தேர்தலில் அவர்கள்மீது அதிருப்தி அடைந்தவர்களாக அவர்களைப்புறக்கணித்து மீண்டும் தமிழ்த்தேசியக் கட்சிகளை சபையேற்றியிருக்கிறார்கள்.

வடக்கு மக்களின் பாராளுமன்றத்தெரிவுகள் குறித்த பல்வேறு விமரிசனங்கள் அம்மக்களின் கல்வியறிவு தொடர்பாகவும் தமிழ்த்தேசிய உணர்வு தொடர்பாகவும் பெரும் விசனத்தைக்கொண்டிருந்தது.

6 மாதங்கள் கடந்த நிலையில் அவர்கள் அந்த விமரிசனங்களுக்குத் தக்க பதிலை வழங்கியிருக்கின்றனர். தவிர்க்கவேண்டியவர்களைத் தவிர்த்து தேர்வு செய்யவேண்டியவர்களைத் திறம்படத்தேர்வு செய்துள்ளார்கள்.

அளிக்கப்பட்ட வாக்குகளின் தொகை இன்னுமொரு 10 வீதம் அதிகமாக இருந்திருப்பின் திசைகாட்டியின் பிரதிநிதித்துவம் பூச்சியமாக இருந்திருக்கும். அத்தோடு வவுனியா மாநகர சபையும் முழுமையாக தமிழ்த்தேசியத்தின் கைகளில் விழுந்திருக்கும்.

எது எவ்வாறிருப்பினும் வெற்றிபெற்ற தமிழ்த்தேசியத்தரப்பு ஒற்றுமையாக ஒன்றிணைந்து சபைகளில் கட்சிபேதம் மறந்து மக்கள் நலனுக்காக பிரதேச அபிவிருத்தியில் கவனம்செலுத்தத் தவறுவார்களாயின் அடுத்துவரும் மாகாண சபைத்தேர்தலில் மக்களின் முடிவுகள் வேறுவிதமாக அமைந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பை ஆயுதமாக்கி மக்களின் பெறுமதியான வாக்குகளின் பெறுமானத்தைக் கேவலப்படுத்தி சபைகளைச் சந்தைகளாக்குவீர்களாயின் மக்களின் பதிலடி சம்பந்தப்பட்ட கட்சிகளுக்கு மரண அடியாக அமையும் என்பதை வெற்றிபெற்ற தரப்பினர் எச்சரிக்கையாகக்கொள்ளவேண்டும்.

ஒற்றுமையே பலம்!" இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ்ப்பாணம் – அராலி பகுதியில் உழவு இயந்திரத்தின் சக்கரத்தினுள் சிக்குண்டு இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு!



புதன்கிழமை 07.05.2025 அன்று யாழ்ப்பாணம் - அராலி பகுதியில் உழவு இயந்திரத்தின் சக்கரத்தினுள் சிக்குண்டு இளம் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார். இதன்போது அராலி மேற்கு, வட்டுக்கோட்டை என்ற முகவரியை சேர்ந்த பத்மநாதன் தனீஸ்வரன் (வயது 38) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.



இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபர் அன்றிரவு தனது உழவு இயந்திரத்தின் கீழே இறங்கி நின்றவாறு திறப்பினை இயங்க செய்துள்ளார். இதன்போது கியர் இயக்கத்தில் இருந்த உழவு இயந்திரம் திடீரென இயங்க ஆரம்பித்தது. இந்நிலையில் நிலைகுலைந்த குறித்த குடும்பஸ்தர் கீழே விழுந்ததால் அவர்மீது உழவு இயந்திரத்தின் சக்கரம் ஏறியது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த குறித்த குடும்பஸ்தர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். இருப்பினும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

உலக செய்திகள்
World News

# Sri Lanka's Speaker meets Canadian High Commissioner for Sri Lanka Mr. Eric Walsh at the Parliament

# இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வால்ஷ்அவர்கள் இலங்கையின், சபாநாயகரைச் சந்தித்தார்



இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வால்ஷ், கௌரவ சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்ரமரத்ன அவர்களை மே மாதம் 2ம் திகதி வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். இரு தரப்பினருக்கும் இடையே இடம்பெற்ற இச்சந்திப்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் கலந்துகொண்டார்.

அண்மையில் கனடாவில் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்ற கனேடியப் பிரதமருக்குத் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்த சபாநாயகர், கனேடிய மக்களுக்கும் தனது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்தார். அத்துடன் கனடாவிற்கும் இலங்கைக்கும் இடையில் ஆறு தசாப்தத்திற்கு மேலாகக் காணப்படும் உறவுகளையும் நினைவு கூர்ந்தார்.

இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு கனடா தொடர்ச்சியாக வழங்கிவரும் ஒத்துழைப்புக்களுக்கும் சபாநாயகர் நன்றியைத் தெரிவித்தார். மகாவலி போன்ற நீர்ப்பாசனத் திட்டங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள், கண்ணிவெடி அகற்றல், சமாதானத்தை கட்டியெழுப்புதல் போன்ற விடயங்களில் இலங்கைக்கு கனடா வழங்கிய உதவிகளையும் சபாநாயகர் நினைவு கூர்ந்தார்.



பொருளாதார ரீதியில் நெருக்கடியான நிலைமைகளின்போதும், கடன் மறுசீரமைப்பின் போதும் கனடா வழங்கிய உதவிகளுக்கும் சபாநாயகர் நன்றி தெரிவித்தார்.

கனடா பாராளுமன்றத்தில் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட கனேடியர்களின் பிரதிநிதித்துவம் அதிகரித்து வருவதை சபாநாயகர் பாராட்டியதுடன், இது கனடாவின் பன்முக கலாச்சார சமூகத்தின் பிரதிபலிப்பாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். இலங்கையில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த புதிய அரசாங்கம் உறுதியுடன் இருப்பதாகவும், இனரீதியான, மதரீதியான பிரிவினைகளை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதில் அரசு உறுதியாக இருப்பதாகவும் சபாநாயகர் குறிப்பிட்டார். அத்துடன், ஊழலை ஒழிக்கும் விடயத்தில் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில் அரசாங்கம் உறுதியாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

கண்ணிவெடி அகற்றும் விடயத்தில் இலங்கை அரசாங்கம் அக்கறையுடன் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது எனச் சுட்டிக்காட்டிய கனேடிய உயர்ஸ்தானிகர், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும், ஊழலை ஒழிப்பதற்கும் அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளைப் பாராட்டினார்.

இரு நாடுகளினதும் பாராளுமன்றங்களுக்கிடையிலான பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் தொடர்புகளை விருத்தி செய்துகொள்ளும் நோக்கில் இலங்கை - கனடா பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தை பத்தாவது பாராளுமன்றத்தில் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் கௌரவ சபாநாயகர் இதன்போது தெரிவித்தார்.

இலங்கைக்கும் கனடாவுக்கும் இடையிலான நீண்டகால நட்பை மேலும் மேம்படுத்துவது குறித்தும் இதில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# தனக்கு தானே தீ வைத்த மன்னார் – மடு பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பப் பெண் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மரணம்!

தீ காயங்களுக்கு உள்ளாகி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இளம் குடும்பப் பெண் ஒருவர் 8ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம் உயிரிழந்துள்ளார். மன்னார் - மடு பகுதியைச் சேர்ந்த குமணன் தனுசா (வயது 29) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த பெண்ணுக்கும் கணவருக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடு காரணமாக தனக்கு தானே தீ வைத்துள்ளார். இதனால் தீ காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் முருங்கன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி வியாழக்கிழமை அன்று அதிகாலை உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# நீர்வேலி பகுதியை சேர்ந்த பெற்றோருக்குப் பிறந்த இரட்டை குழந்தைகளில் ஒரு குழந்தை உயிரிழப்பு!

யாழ்ப்பாணம் நீர்வேலியில் பிறந்த இரட்டை குழந்தைகளில் ஒரு குழந்தை 7ம் திகதி புதன்கிழமை உயிரிழந்துள்ளது. நீர்வேலி தெற்கு, நீர்வேலி பகுதியை சேர்ந்த விஜிகரன் கேனகா என்ற, பிறந்து ஏழு நாட்கள் நிரம்பிய குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், இரட்டை குழந்தைகள் பிறந்த நிலையில் குழந்தைகள் இரண்டும் கண்ணாடி பெட்டியில் வைக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் குறித்த குழந்தை புதன் இரவு உயிரிழந்துள்ளது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளுக்காக குழந்தையின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# அன்னையரை ஆராதிப்போம்!

அம்மா என்பது அருமைச் சொத்தாம்
அன்புக் கடவுளின் ஆலயமாம்
நம்மைச் சுமந்த நல்மன உறவை
நானிலம் உள்ளவரை மறப்போமா?
அன்னையின் பெருமை அகிலம் அறியுமே
அவரெமக்கு அரிய கொடையே!
என்ன விலையும் ஏற்க இயலா
எமைப் பெற்ற அன்னைக்கே!

எப்படி மறப்போம் இவரது அன்பை
எம்மை இங்கு ஈந்தவரை
தொப்புள் கொடியின் தொடர்பு அல்லவா?
தொடரும் கதையாய்த் தொடருவது

அருவியின் உயரத்தை அளந்து சொல்லலாம்
அன்னையின் அன்புக்கு அளவெது?
பெருமை பெறும்படி பேணி வளர்த்தவரை
பேரோடு வாழச் செய்வோமே!

ஊட்டிய சோற்றையும் உறங்கிய பாட்டையும்
உயிருடன் உள்ளவரை மறப்போமா?
வாட்டிடும் வியாதி வந்த போதெலாம்
வருந்தி விரதம் இருப்பாயே!
பாட்டி வடைக்கதை பரிவாய்ச் சொல்லியே!
பக்கத்தில் படுக்க வைப்பீர்
வீட்டு முன்னால் விளையாடி வீழ்ந்தால்
விரைந்து வந்தே காப்பாயே!

பிள்ளைகள் பசிக்கு தன்பசி மறக்கும்
பெற்றவள் பெருமையைப் போற்றுவோம்
கள்ளம் இல்லாக் கருணைத் தாயை
கண்போல் காப்போம் கடைவரை

அன்னை தந்த அணைப்புச் சுகத்தை
ஆயுள் உள்ளவரை மறப்போமா?
தன்னை உருக்கி தாய்ப்பால் தந்தவரை
தரணியில் உள்ளவரை தாங்குவோமே!

கண்ணின் இமைபோல் காத்தீர் எம்மை
கண்ணும் கருத்துமாய் வளர்த்தீர்
மண்ணில் நீவிர் மரிக்கும்முன் செய்ததை
மறப்போமா? உயிருடன் உள்ளவரை
விண்ணை நோக்கி விரைந்த போதிலும்
விலகிடா உம்நினைவு எம்மனதில்
எண்ணம் முழுவதும் இறைந்த உம்மை
இவ்வுலகில் உள்ளவரை துதிப்போமே!

ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்
(416) 844-7453

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடதய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5


ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி
SRI VARASITH VINAAYAGAR HINDU TEMPLE OF TORONTO
LET LOVE BIND US ALL TOGETHER
இணைந்து வழங்கும்
19ம் ஆண்டு
சிவத்தமிழ் விழா
மே 10 சனிக்கிழமை
பகல் 2:30 மணிக்கு
அனுமதி இலவசம்
கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில்
733 Birchmount Road, Scarborough
பாடல்
காவடி
வேதபாராயணம்
பட்டிமன்றம்
கவிதை
நாடகம்
தேவாரம்
வழக்காடுமன்றம்
வில்லுப்பாட்டு
நடனம்
கல்வி
நிலையான
செல்வம்
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி தமிழ், சமய, பண்ணிசை, வேதபாராயண
ஆசிரியர்களின் நெறியாள்கையில் மாணவர்கள் வழங்கும் முத்தமிழ் விழா
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி 416.291.7900, 647.336.3333 www.varasiththi.com
மிகவும் சிறப்பாக நடைபெறவிருக்கும் இச் சிவத்தமிழ் விழாவில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.


அடகுமாடம் - பவுண் வாங்கி - தங்க நகை கடன்
கனகாம்பிகை
அடகுமாடம்
Pawn Bank Inc.
416.269.7198
2613 Eglington Ave East, Scarborough



Fashion World Inc
Home of Toronto's Most Exclusive & Unique Kancheepuram Collection
Tel: 905 471 2223
www.thefashionworld.com
7393 Markham Road, Unit 82,83 & 84
Markham, ON L3S 0B5


குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி
THANA Insurance Inc.
416.728.5772
Thana Manickavasagar


Qualified Dentist in Your Neighborhood
SANDHURST FAMILY DENTAL CLINIC
Creating Better Smiles Together
Dr. Pavithra Nantheeswarar DDS
416-299-1020


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000


அம்மா
Amma Pawn Broker
தங்கநகை அடைவு மாடம்
416.757.0034
416.994.3861
Kennedy & Eglington, Scarborough


ரங்கனாஸ் நகைமாடம்
மார்க்கம் & ஸ்ரீலங்
647.702.2159


TECHSOURCE
Computer & Electronics Liquidator
Etobicoke
(Albion & Islington)
647-352-2229
Scarborough
(Kennedy & Sheppard)
416.757.9111


Shop for Auto Parts
747 AUTOPARTS
Markham
905.471.4447
Scarborough
416.285.4447


Breakfast - Lunch - Dinner & More
DATTA FOOD
Always Fresh
100% Vegetarian Food Take-out & Catering
416-297-8402


MORTGAGE ARCHITECTS
THAYANANDA (DARSHAN) THURAIRAJAH
416.843.6279
darshan.thurair@mtgarc.ca


பூஜா ஸ்டோர்ஸ்
POOJA STORES
1209 Ellesmere Rd. Scarborough, Ontario
416-752-3112 416-738-1271


SHY ENTERPRISE
Retailer of Paper Products
Disposable Products
Cleaning Supplies
Foam Takeout Box,
Garbage Bags
Paper Towels
Toilet Papers,
Napkins
All kind of Plastic Bags
416.602.9714 - 905.205.0011


ERAA SUPER MARKET
5930 Finch Ave. E. Scarborough, ON
Tel: 416.292.2622
2607 Eglinton Ave. E. Scarborough, ON
Tel: 416.269.2622

VILLAGE NISSAN

தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்

*DAA ROTATION



**25 SENTRA**
S CVT ULTRA-LOW
$69 WEEKLY | 39 MOS. LEASE $2,695 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION



**25 KICKS PLAY**
S ULTRA-LOW
$69 WEEKLY | 39 MOS. LEASE $2,192 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION




**25 ROGUE**
S AWD
0.99% | 30 MOS. LEASE
+$1,000 60th Anniversary Cash



**Sajanthan Vijayakumar**
SALES CONSULTANT
905.477.3337 647.631.9054
saj@villagenissan.com

VILLAGE NISSAN
25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com




# Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)


டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரபபவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**


Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24




# உரிமம் வழங்கல், அனைவருக்கும் பாதுகாப்பான வாடகை இடங்களை உருவாக்குதல்



குடியிருப்புக்கான வாடகைப்பகுதிகளுக்கு உரிமம் வழங்குதல்

**நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியவை எவை**

வாடகை குடியிருப்புகளுக்கு உரிமம் வழங்கும் (RRL) முன்னோடித் திட்டத்தின் மூலம் வாடகைக்கு விடும் பகுதிகளின் பாதுகாப்பை மேம்படுத்த பெரிய நடவடிக்கைகளை பிராம்ப்டன் நகரம் எடுத்து வருகிறது!

1, 3, 4, 5 மற்றும் 7 வார்டுகளில், ஒன்று முதல் நான்கு வாடகை அலகுகளைக் கொண்ட கட்டிட உரிமையாளர்கள் மற்றும் நிர்வாகிகள் ஒவ்வொரு தனி சொத்துக்கும் உரிமம் பெற வேண்டும்.

2025 ஆம் ஆண்டின் மீதமுள்ள காலத்திற்கு, உரிமம் பெறுவதற்கான விண்ணப்பக் கட்டணம் $300 ஐ நகர நிர்வாகம் தள்ளுபடி செய்கிறது.

கட்டணத் தள்ளுபடி சலுகை காலத்தில் விண்ணப்பித்து வாடகைக்கு விடுவதற்கான உரிமம் பெறுபவர்களுக்கு புகை எச்சரிப்புக் கருவி ஒன்று இலவசமாக வழங்கப்படும்.

ஒரு குடியிருப்பாளராக, சொத்துக்கு உரிமையாளராக மற்றும் குத்தகைதாராக, இருக்கும் உங்களுக்கான பொறுப்புகளை நீங்கள் புரிந்துகொள்வது நமது நகரத்தின் வாழ்க்கைத் தரத்தைப் பேணிவர உதவுகிறது.

3-1-1

பதிவு செய்ய மற்றும் மேலும் அறிய வருகை தரவும்:
**brampton.ca**/rrl

BRAMPTON

# UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL - 2025

## On 14th June, 2025 in Scarborough Canada

I would like to congratulate
CANADA UTHAYAN
and
UTHAYAN AWARDS FOUNDATION
for hosting the
19th annual festival.

My best wishes
for a successful event.



ONTARIO

**Aris Babikian**
MPP / DÉPUTÉ
SCARBOROUGH-AGINCOURT

**Constituency Office:**
207-4002 Sheppard Ave. E. Scarborough, ON M1S 1S6
**Tel:** 416-297-6568 **Email:** aris.babikianco@pc.ola.org

உ



கனடா மிஸிஸாகா பிரம்ரன்

# அருள்மிகு கற்பக விநாயகர் தேவஸ்தானம் பிறம்ரன்
# வருடாந்த கொடியேற்ற-மஹோற்சவப் பெருவிழா
# விஞ்ஞாபனம்-2025

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர் ஆயின எல்லாம்
நிலதரஞ்செய்யும் நீள் விசும்பருளும் அருளொடு பெரு நிலமளிக்கும்
வலம் தரும் மற்றும் தந்திடும் பெற்றதாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்.

சீர்மேவு மதி நதியுமரவும் சிறப்பும் சூழ்ந்த
பார்போற்றும் சிவனுமையின் மைந்தராகி
கார்மேவும் கனடாவின் களிறு நாயகனாகி
நேர்மேவு கற்பகத்து கணபதியே காப்பு.

அருவமும் உருவுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரம்மமாய் நின்றசோதி பிளம்பதோர் மேனியாக
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரெண்டும் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய

## ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் அடியார்களே!

சகல செல்வங்களும் நிறைந்து விளங்கும் கனடா மிஸிஸாகா பகுதியில் பிரம்ரன் மாநகரில் எழுந்தருளியிருந்து தம்மை பக்தியுடன் வந்து வழிபடும் மெய்யடியார்களின் இன்னல்களைப் போக்கி நல்லருள் பாலித்து ரட்சிப்பவராகிய ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் பெருங்கருணையினால் அழகிய திருமணமண்டபம் மணிமண்டபம் கொடிஸ்தம்பத்துடன் கூடிய புதிய திருக்கோவில் நிர்மாணிக்கப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நிகழ்ந்தேறிய பின்னர் பதினேழாவது முறையாக நிகழும் மங்களகரமான விசுவாவசு வருஷம் வைகாசி மாதம் மூன்றாம் நாள் (ஆங்கிலம்16-05-2025) வெள்ளிக்கிழமை பகல் 11:30 மணிக்கு கொடியேற்று விழாவுடன் மஹோற்சவம் ஆரம்பமாகி வைகாசி மாதம் 26ம் நாள் ஆங்கிலம் 08-06-2025 ஞாயிற்றுக்கிழமை வைகாசி விசாகத் தினத்தில் தேர்த்திருவிழாவும் 09-06-2025 திங்கள்கிழமை தீர்த்தோற்சவம் கொடியிறக்கல் திருவிழா வரையில் வழமைபோல இருபத்தைந்து தினங்களுக்கு பகலும் இரவும் கொடிஸ்தம்ப பூஜை மஹாயாக பூஜை ஆகியவற்றுடன் வருடாந்தப் பெருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற ஸ்ரீ கற்பகவிநாயகர் நல்லருள் பாலித்துள்ளார். விரதகாரர்கள் உபயகாரர்கள் அனைவரும் கீழ்காணும் காலநேர அட்டவணைப்பிரகாரம் நிகழவிருக்கும் திருவிழாக்களை ஆசார நியமங்களுடன் தினமும் வந்து தரிசித்து கண்கண்ட தெய்வமாம் கற்பகவிநாயகரின் அருளால் வேண்டியவரங்களைக் குறையாது பெற்றுச் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு வாழும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம். சுபம்

மஹோற்சவ சிவாச்சாரியார்:
சிவாகம பாலசூரியர், சிவாகமவித்வான்
சிவஸ்ரீ கோகுலநாத குருக்கள்
ஸ்ரீநாகபூசணி அம்மன் திருக்கோவில் U.K. லண்டன் ஸ்தாபகர்
மற்றும் பிரதம குருக்கள்

ஆலய குருமார்:
சிவஸ்ரீ விஸ்வநாத கைலசநாத குருக்கள் (பாண்டிச்சேரி, இந்தியா)
சிவஸ்ரீ சண்முக ஜனார்த்தன குருக்கள் (பாண்டிச்சேரி, இந்தியா)

கனடாவாழ் குருமார்கள் அனைவரையும் மஹோற்சவ விழாக்காலங்களில் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் பணிவன்புடன் அழைக்கிறோம்.
முக்கிய குறிப்பு:
தேர்த்திருவிழாவன்று காவடி கற்பூரச்சட்டி, எடுக்க விரும்புவோர் தயவுசெய்து உங்கள் பெயர்களை முன்னரே பதிவு செய்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

15-05-2025 வியாழன் மாலை 5மணிக்கு கணபதி ஹோமம் தொடர்ந்து அனுக்ஞை கிராமசாந்தி வாஸ்துசாந்தி மிருத்சங்கிரஹணம் நடைபெறும்.

**கொடியேற்றத் திருவிழா காலை 11:30மணி தேர்த்திருவிழா காலை 11:30மணி தீர்த்தத் திருவிழா காலை 11:30 மணி**

**விழாக் கால நிகழ்வுகளின் நேர கால விபரங்கள்**

| | | | காலை உபயம் | மாலை உபயம் | திருவிழா அலங்காரங்கள் |
|---|---|---|---|---|---|
| 01 | 16-05-2025 | வெள்ளி | கொடியேற்ற விழா திரு. கு.முத்துக்கிருஸ்ணன் குடும்பம் - சுழிபுரம் | திரு. பிரதீபன் சிவராஜா குடும்பம் | ஓங்கார வடிவம் |
| 02 | 17-05-2025 | சனி | திரு. சுகுனேந்திரன் வாசுகி குடும்பம்-புங்குடுதீவு சிவநேசராசா காளிராசா குடும்பம்-மீசாலை | தம்பிஐயா-மனோன்மணி குடும்பம் சிவனேசன் சுசீலா குடும்பம் சந்திரகுமார் உதயலட்சுமி குடும்பம் | சூரியப்பிரபை |
| 03 | 18-05-2025 | ஞாயிறு | திரு. பாலகாந்தன் கனகசபை குடும்பம் கரவெட்டி | திரு.அருட்பிரகாசம் ரெங்கநாதன் குடும்பம் சுழிபுரம் | சந்திரப்பிரபை |
| 04 | 19-05-2025 | திங்கள் | திரு. தியாகராஜா அன்பழகன் குடும்பம் கிளிநொச்சி | திரு. சிவஞானம், திரு. பரமேஸ்வரன், திரு.பூலோகசிங்கம் திரு. செல்வரத்தினம் குடும்பம் -நயினாதீவு மக்கள் | நட்சத்திர வடிவம் |
| 05 | 20-05-2025 | செவ்வாய் | திரு. பாலச்சந்திரன் ரதிமாலா குடும்பம் பிருந்தாவன உணவகம் | திரு. கதிர்காமநாதன் குடும்பம் திரு. நாதன் குடும்பம் - சுழிபுரம் | திருத்தொங்கல் வடிவம் |
| 06 | 21-05-2025 | புதன் | சிவகுமார் தியாவி திருச்சி | ஜெயராம் அபிராமி குடும்பம் மட்டுவில் | கப்பல் திருவிழா |
| 07 | 22-05-2025 | வியாழன் | திரு. கஜதீபன் சுஜா குடும்பம் தையிட்டி, காங்கேசன்துறை | பசுபதிப்பிள்ளை குமரசற்குணன் குறிகட்டுவான் | சிவலிங்க வழிபாடு |
| 08 | 23-05-2025 | வெள்ளி | திரு. நடராசா பிரதீபன் நிஷா குடும்பம் தச்சன்தோப்பு | திரு. இரத்தினவடிவேல் குடும்பம் சுழிபுரம்- தும்பளை | நாக வாகனம் |
| 09 | 24-05-2025 | சனி | திரு. பொன்னையா கனகலிங்கம் குடும்பம் அல்வாய் | திரு. தியாகராஜா பரமநாதன் குடும்பம் தாவடி | மூஷிக வாகனம் |
| 10 | 25-05-2025 | ஞாயிறு | திரு. தவராசா சிவசோதி குடும்பம் அனலைதீவு | திரு. சந்திரபோஸ் பிருந்தா குடும்பம் Plastform Countertops Ltd. | மஞ்சம் |
| 11 | 26-05-2025 | திங்கள் | திரு. சின்னத்தம்பி குலேந்திரன் குடும்பம் கோப்பாய் | ஓர் அன்பர் | மயில் வாகனம் |
| 12 | 27-05-2025 | செவ்வாய் | திரு சிவகுரு பத்மநாதன் குடும்பம் நுணாவில், சாவகச்சேரி | திரு. சிவலிங்கம் திருக்குமரன், தனுஷன், அனோயன், நிக்ஷன் குடும்பம் - இணுவில் | கற்பகதரு வடிவம் |
| 13 | 28-05-2025 | புதன் | திரு. பரஞ்சோதி-ரஜனி குடும்பம் (கனடா) | ஓர் அன்பர் | குதிரை வாகனம் |
| 14 | 29-05-2025 | வியாழன் | ஓர் அன்பர் | செந்தூரன் லாவன்யா குடும்பம் மட்டக்களப்பு | மஞ்சள் அலங்காரம் |
| 15 | 30-05-2025 | வெள்ளி | Steve பாலசிங்கம் குடும்பம், மட்டுவில் ONGO I LOGISTIC | திரு. நிரஞ்சன் நிரு குடும்பம் பிரம்ரன் | கஜ அலங்காரம் |
| 16 | 31-05-2025 | சனி | ஓர் அன்பர் | திரு. இ. வேணுகோபாலன் குடும்பம் புன்னாலைக்கட்டுவன் | கருட வாகனம் |
| 17 | 01-06-2025 | ஞாயிறு | திரு. குமாரசாமி பிரபாகரன் நளினி குடும்பம் சங்கரத்தை, வட்டுக்கோட்டை | திரு. ரத்னபாலன் சோபா ராஜ் குடும்பம் -மானிப்பாய் | பக்தி முக்தி பாபநாசம் |
| 18 | 02-06-2025 | திங்கள் | ஓர் அன்பர் (பிரம்ரன்) | திரு. ஜெய்கீதா குடும்பம் கேரளா, இந்தியா | நர்த்தன வடிவம் |
| 19 | 03-06-2025 | செவ்வாய் | திரு. சந்திரமோகன் சுகிர்தா குடும்பம்-துன்னாலை | திரு. நிரஞ்சன் அருணாசலம் குடும்பம் Top Quality Plastic Ltd. | கைலாச வாகனம் |
| 20 | 04-06-2025 | புதன் | ஓர் அன்பர் | திரு. யோகி முருகேசு மஞ்சு குடும்பம் அனலைதீவு | காமதேனு வாகனம் |
| 21 | 05-06-2025 | வியாழன் | ஓர் அன்பர் | திரு. பொன்னம்பலம் சர்வேஸவரன் குடும்பம், சுழிபுரம் | மாம்பழத் திருவிழா |
| 22 | 06-06-2025 | வெள்ளி | காரைநகர் மக்கள் - வேட்டைத் திருவிழா | ஓர் அன்பர் | வேட்டைத் திருவிழா |
| 23 | 07-06-2025 | சனி | ஓர் அன்பர் | திரு சாம் குடும்பம் சிங்கப்பூர் | சப்பறத் திருவிழா |
| 24 | 08-06-2025 | ஞாயிறு | தேர்த் திருவிழா DYNEVOR EXPRESS அழகரெட்ணம் குமார் குடும்பம் கனடா | திரு முத்துக்குமார் தயாவதி குடும்பம் | வைகாசி விசாக முருகன் விழா தேரடி உற்சவம் |
| 25 | 09-06-2025 | திங்கள் | தீர்த்தத் திருவிழா - திரு லெட்சுமன் குடும்பம் (சென்னை) | திரு. கிருபானந்தராஜா றமணி குடும்பம் தொல்புரம் | கொடியிறக்கல் விழா சண்டேஸ்வரர் விழா ஆச்சார்ய உற்சவம் |
| 26 | 10-06-2025 | செவ்வாய் | கற்பக விநாயகர் ஆலய அந்தணர்கள் | | பிராயச்சித்தம் |
| 27 | 13-06-2025 | வெள்ளி | | லக்ஷி சுப்பர் மார்க்கட் | வைரவர் மடை |
| 28 | 14-06-2025 | சனி | திரு. திருவருள் கனகசபை குடும்பம் - | அனலைதீவு | பூங்காவனம் |


**முக்கிய குறிப்பு: ஆடிவேல் திருவிழா இருபத்தி நான்காவது தடவையாக ஆகஸ்ட் மாதம் 14, 15, 16ம் திகதிகளில் வெகு சிறப்பாக நடைபெற்று 17ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடிவேல் இசைமாலையும் சிறப்பாக நடைபெறும்.**

**திருவிழாக்கால நிகழச்சிகள் நேரகால அட்டவணை**

காலை திருவிழா
6:30 மணி காலை பூஜை
7:30 மணி காலை சந்தி பூஜை
09:00 மணி ஸ்நபனகும்ப அபிஷேகம்
10:30 மணி உச்சிகால பூஜை- யாகபூஜை கொடிஸ்தம்ப பூஜை
11:30 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம்
01:00 விபூதி, பிரசாதம் வழங்கப்படும்

மாலை திருவிழா
05:00 மணி ஸ்நபன கும்ப அபிஷேகம்
06:30 மணி மூலஸ்தான பூஜை பஞ்சமுகார்சனை யாக பூஜை கொடிஸ்தம்ப பூஜை
07:30 சமய கலை நிகழ்ச்சிகள்
07:45 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம் பிரசாதம் வழங்கல்.
10:00 மணி அர்த்தஜாமப் பூஜை

தேவஸ்தான மங்கள இசை: கற்பக விநாயகர் தேவஸ்தான இசைக் கலைஞர்கள்
ஜெகநாதன் கோபாலகிருஷ்ணன் - முனிராஜ் முனிரெத்தினம்
அர்ஜுணன் கிருஷ்ணகுமார் - பழனிவேல் கோபாலகிருஷ்ணன்
விசேடமங்கள இசை: கனடா, இலங்கை, இந்தியா கலைஞர்கள்
புஷ்பமாலைகள், புஷ்ப அலங்காரங்கள்: M, குமார் Mark Florist
(விசேஷ திருவிழாத் தினங்களில் நிகழ்ச்சிகளின் காலநேர மாற்றம் அறிவிக்கப்படும்)





ARULMIGU KATPAGAVINAYAGAR HINDU TEMPLE BRAMPTON
200 Advance Blvd, Unit 1, Brampton, (Dixie & Advance Blvd) L6T 4V4
Tel: 905-458-9701 / 905-458-0623 / 416-471-0255 Fax: 905-458-0326
www.srikatpagavinayagar.ca

இங்ஙனம்
என்றும் இறைபணியில் நிற்கும்
கணகுக சிவத்தொண்டர்,
திரு. இரா. விஜயநாதன்
(தேவஸ்தான தர்மகர்த்தா)

VIVEKA

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வலி பேசும் புண்கள்: போரில் காயமுற்ற தமிழீழ விடுதலைப் போராளியின் வெளிக்கூறப்படாத வாழ்க்கை




**போரின் மறக்கப்பட்ட பக்கம்**

போர் என்றால் நமக்குக் காது கிழிக்கும் துப்பாக்கிச்சத்தங்கள், வீரச்சாவுகள், வெற்றிக்கொடியுடன் களத்தில் விழும் வீரர்கள் தான் நினைவுக்கு வரும். ஆனால் அந்தக் காட்சிகளுக்குப் பின்னால், நிசப்தமாக வாழும் ஓர் ஆழமான துயரமும் உள்ளது - போரில் வாழ்ந்துபோனவனின் வாழ்க்கை.

தமிழீழ விடுதலைக் கனவுக்காக உயிரைக் கொடுக்க முனைந்த, விழுப்புண் அடைந்து உயிருடன் மீண்ட போராளி, வாழும் வாழ்க்கை பல நேரங்களில் வீரச்சாவை விட கொடிய மிகவும் இருண்ட, அமைதியான உண்மை ஒளிந்துள்ளது - அதை வாழ்ந்து கடந்த ஒரு போராளியின் வாழ்க்கை.

நிரந்தர காயங்களுடன் போரில் உயிர் தப்பியவர்களுக்கு, வாழ்க்கை பெரும்பாலும் மரணத்தை விட கொடூரமானதாக இருக்கிறது.

இது போர்க்களத்தில் இறக்காமல் - ஆனால் அன்றிலிருந்து ஒவ்வொரு நாளும் மெதுவாக சாகும் ஒரு மனிதனின் கதை.

விழுப்புண் பட்ட உடல் - உண்மையான இன்னொரு போர் தொடங்கும் இடம்

- உடல்மேல் பெயராத ரணங்கள் கண்களால் புறக்கணிக்க முடியாத வடுக்கள்

குண்டுகள் அவரது எலும்புகளை கிழித்துச் சென்றன, அவரை முடக்கிவிட்டன. அவர் உயிர் தப்பினாலும், இயக்கத்தை இழந்தார் நகராத கால், உயராத கை.

ஆயுதங்களின் துண்டுகள் அவரது தசைகளைக் கிழித்தன, திறந்த காயங்களையும் வலியுள்ள நினைவுகளையும் விட்டுச் சென்றன.

மூளையின் நரம்புப் பாதைகளுக்கு ஏற்பட்ட சேதம், அவரால் முன்பு போல பேச முடியாத நிலை - அவரது சொந்த உடலுக்குள் ஒரு கைதி.

"நான் என் உடலைக் கொண்டு திரும்பினேன். ஆனால் நான் இன்னும் அதில் வாழ முடிகிறதா என்று யாரும் என்னிடம் கேட்கவில்லை," என்றார் ஒரு போராளி.

உள்ளார்ந்த போர் - முடிவில்லா நரகம்

துப்பாக்கிகள் அடங்கிய பின்னும், அவருக்குள் நடந்த போர் ஒருபோதும் நிற்கவில்லை.


போர்நிறைவடைந்துவிட்டது என்று உலகம் நினைத்தபோதும், இந்த போராளியின் உள்ளே அது தொடர்ந்துகொண்டே இருக்கிறது.

உளவியல் நெருக்கடிகள்:

"நாம் எதற்காகப் போரிட்டோம்? இதற்காகவா?" என்ற எண்ணங்களால் அடிக்கடி வாதாடும் மனம்.

PTSD (போஸ்ட் ட்ராமாடிக் ஸ்டிரஸ் டிசார்டர்), தூக்கத்தைத் தொடர்கிறது. வீழ்ந்த தோழர்களின் நினைவுகள் அவரைத் துன்புறுத்துகின்றன.

மனச்சோர்வு ஒரு தினசரி விருந்தாளி. உயிர் தப்பியவரின் குற்ற உணர்ச்சி - "மற்றவர்கள் இறந்தனர், நீ ஏன் உயிர் தப்பினாய்?" என்று கிசுகிசுக்கும் கொடூரமான குரல்.




தோழர்களின் மரணத்தைக் காணும் நினைவுகள், கண்ணை மூட விடாத கத்திகள் போலச் சுழலும்.

ஒரு வாழும் சாபம்:

"அவர்கள் வீர மரணம் அடைந்தனர். நான் ஒரு சபித்த வாழ்க்கை வாழ்கிறேன்," என்று அவர் கூறுகிறார்.

அவர் உயிர் தப்பியதை கொண்டாடுவதில்லை - அதை தாங்கிக் கொள்கிறார்.

இதுதான் காணப்படாத போர் - எல்லைகள் இல்லாத, உடன்படிக்கைகள் இல்லாத, முடிவில்லாத போர்.

போர் வெளியில் முடிந்தாலும், அந்த மனக்கிளர்ச்சி உள்ளே தொடர்கிறது.

சமூகத்தின் நிராகரிப்பு - வீரனிலிருந்து சுமைக்கு

போர் காலத்தில் "தலைவன்", "வீரர்", "தமிழீழத்தின் தளபதி" என்று போற்றப்பட்டவர்கள், இன்று ஓர் பாரமாக பார்க்கப்படுகின்றனர்.

மறந்துபோன சமூகங்கள்:

வேலை செய்ய இயலாதவர்களாக, உடல் ஊனமுற்றவர்களாக அவர்களை இப்போது அபாயமாக பார்க்கின்றனர்.

அண்டை வீட்டார் கிசுகிசுப்பார்கள்: "அவர் எப்போதும் வீட்டில் தானே இருக்கிறார். ஏன் வெளியே போய் வேலை செய்யக்கூடாது?"

முதலாளிகள் அவரை வேலைக்கு அமர்த்த தவறுகிறார்கள். நண்பர்கள் தொடர்பு கொள்வதை நிறுத்துகிறார்கள். உறவினர்கள் விலகிச் செல்கிறார்கள்.

அரசுத் திட்டங்களின் புறக்கணிப்பு:

அரசு அவரது தோழர்களின் இரத்தத்தால் நினைவுச்சின்னங்கள் கட்டியது - ஆனால் அவரை காயத்துடன் விட்டுவிட்டது.

சிகிச்சைகள், மறுவாழ்வு மையங்கள், சுயதொழில் திட்டங்கள் எதுவுமே இல்லை.

இவர்களின் இரத்தம் சிந்தியதால் தான் நாம் வாழ்கிறோம். ஆனால் அவர்களை நம்மால் பார்க்கவே முடியவில்லை.

வீடு - மற்றொரு போர்க்களம்

வீடு என்பது பாதுகாப்புக்கான இடமாக இருக்க வேண்டும். ஆனால் பல போராளிகளுக்கு, வீடு இன்னொரு ரணத்திற்கான இடமாகவே மாறிவிடுகிறது.


குடும்ப உறவுகள் சிதறும். உணர்வுகள் உறவுகளைத் தாக்கும்.

மனைவியின் எரிச்சல், குழந்தைகளின் விலகல், பெற்றோரின் அமைதியான துக்கம் - எல்லாமே எதிரிகளின் தோட்டாக்களை விட கடுமையாக பாய்கின்றன.

நெருக்கம் மறைந்துவிடுகிறது. தொடர்பு இறந்துவிடுகிறது. வீடு ஒரு மௌன சிறையாக மாறுகிறது.

அவர் தனது குடும்பம் சிதைவதை பார்க்கிறார், மேலும் அதை சரி செய்ய முடியாது என்பது அவருக்குத் தெரியும்.

அரசியல் துரோகம் - சக்திவாய்ந்தவர்களின் மௌனம்



தமிழ் தேசம், தமிழீழம், விடுதலை என்ற சொற்கள் இன்று அரசியல் ஓட்டுகளுக்கான கருவியாகவே மாறியுள்ளன.

போராளிகளை கொண்டு பேருரை பேசுபவர்கள், தேர்தல் முடிந்ததும் அவர்களை மறந்து விடுகின்றனர்.

நினைவுத்தூண்கள் வீரச்சாவிற்கு மட்டும். விழுப்புண் பெற்றவர்களுக்கு இடமில்லை.

மாவீரர் நாளில் புகைப்படங்கள்! ஆனால் வாழும் மாவீரனை சந்திக்க யாரும் முன்வருவதில்லை.

இவர்களின் புண்கள், வரலாறு மறுக்கும் அறிகுறிகள், அவரது காயங்கள் இப்போது ஒரு பொறுப்பு, அவர்கள் மறக்க விரும்பும் ஒன்றின் நினைவூட்டல்.

வாழும் வரலாற்று சாட்சிகள் - வீர மரணத்தைவிட கொடிய வாழ்நிலை

விழுப்புண் பெற்ற தமிழீழ போராளிகள் தவறவிடக்கூடாத அவர்கள் வரலாற்றின் வாழும் பதிவுகள்.

வீர மரணங்கள் கௌரவிக்கப்படுகின்றன. ஆனால் உயிர் தப்பியவர்களின் வலிமிகுந்த வாழ்க்கை கண்ணியம் மறுக்கப்படுகிறது.

அவர்களின் இருப்பே விடுதலை இன்னும் அடையப்படவில்லை என்பதற்கான சான்று.

"நாம் அவர்களை மறந்தால், வரலாறு நம்மை மறந்துவிடும்."

புண்கள் பேசிய புனித வாழ்க்கை

வீரச்சாவிற்கு இடமுண்டு, நினைவுண்டு. ஆனால் விழுப்புண் அடைந்த வீரனுக்காக யாரும் நினைவாக நினைக்க மாட்டார்கள்.

சாவு எளிதாக இருந்திருக்கும். இந்த வாழ்நிலைதான் இன்னும் கொடியது."

ஒரு போராளியின் அத்தாட்சிப் பேச்சு.

அவர்களின் காயங்கள் பேச வேண்டும்.
அவர்களின் கதைகள் கேட்கப்பட வேண்டும்.
அவர்களின் வலி நம்மை உலுக்கி எழுப்ப வேண்டும்.
இவர்கள் போன பாதை, எதிர்கால தமிழருக்கு விழிப்புணர்வாகட்டும்.
இது வெறும் கட்டுரை அல்ல - இது ஓர் அழைப்பு.

என்றும் வலியுடன்,
ஈழத்து நிலவன் (09-05-2025)

*(8 பக்கத் தொடர்ச்சி)*

## *உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் உணர்த்துவது?*

அர்ஜுனாவின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட போது அவர் தனது ஆதரவாளர்களிடம் சைக்கிளை ஆதரிக்குமாறு கேட்டிருந்தார். இவ்வாறாக வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதனால் குறிப்பிட்ட கட்சிகள் தமது ஆதரவாளர்கள் திசை காட்டிய நோக்கிச் செல்வதைத் தடுக்கும் ஒரு விடயத்தில் கட்சிகளுக்கு இடையே ஒருவித புரிந்துணர்வு இருந்தது. ஆனாலும் அங்கேயும் கட்சிகளுக்கு இடையிலான பகை மற்றும் போட்டிகளின் அடிப்படையில்தான் யாரை ஆதரிப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது.

கூட்டிக்கழித்துப் பார்த்தால் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பெற்ற வெற்றிகளின் பின்னணியிலும் தோல்விகளின் பின்னணியிலும் ஒற்றுமையின்மைதான் உண்டு. கடந்த 15 ஆண்டுகால தமிழரசியலில் ஏற்பட்டிருக்கும் தேக்கத்துக்கும் அதுதான் காரணம். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் என்பிபிக்கு கிடைத்த வெற்றிகளுக்கும் அதுதான் காரணம். இந்தத் தேர்தல் தமிழ் மக்களின் தலைவிதியை தீர்மானிக்கும் ஒரு தேர்தல் என்று கூற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதற்கும் அதுதான் காரணம். எனவே, தமிழ்த் தேசியக் கட்சிகள் தோல்விகளிலிருந்து மட்டுமல்ல உள்ளூராட்சி சபைத் தேர்தல் வெற்றிகளிலிருந்தும் கற்றுக் கொள்ள வேண்டும்.

கனடிய செய்திகள்
Canadian News

# பன்முக ஆற்றலும் பக்குவமும் கொண்ட டாக்டர் சாம்பசிவஸ்ரீ. சோமஸ்கந்த குருஜியின் கலை இலக்கியப் பங்களிப்புக்கு "மகுடம்" சூட்டிய நூல் வெளியீட்டு விழா



கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் பல பாகங்களிலும் அதனைத் தொடர்ந்து கனடாவிலும் தனது பன்முக ஆற்றலாலும் பக்குவமான அணுகலினாலும் ஆயிரக்கணக்கானவர்களைக் கவர்ந்தவர் நல்லூர் சாம்பசிவஸ்ரீ. சோமஸ்கந்த குருஜி அவர்கள். அன்னாரின் வில்லுப்பாட்டுத்துறையின் சாதனை, பாடும் திறன் முகபாவங்களைக் காட்டி சொற்களின் இறுக்கத்தை உயர்த்திக் காட்டுகின்ற நடிப்புத் திறன், கவிதைகள் மூலம் தனது சமூகத்தின் மீதான அக்கறையையும் இனத்தின் மீதான தேசியப் பற்றையும் காட்டும் கவிதைகளை வடித்தல் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்ட டாக்டர் சாம்பசிவஸ்ரீ. சோமஸ்கந்த குருஜி அவர்களின் கலை இலக்கியப் பங்களிப்புக்கு மகுடம் சூட்டும் வகையில் அமைந்த அவரது இரண்டு நூல்களின் வெளியீட்டு விழா கடந்த 3ம் திகதி சனிக்கிழமையன்று மாலை கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த நூல்களின் வெளியீட்டு விழாவில் டாக்டர் சாம்பசிவஸ்ரீ. சோமஸ்கந்த குருஜி அவர்களின் "மாணவர் வில்லுப்பாட்டு" மற்றும் "நினைவுப் பூக்கள்" கவிதைத் தொகுதி ஆகியன வெளியிடப்பெற்றன.



மேற்படி வெளியீட்டு விழாவில் டாக்டர் சிவஸ்ரீ சோமஸ்கந்தக்குருக்கள் அவர்கள் ஆசியுரை வழங்கினார். நூல் அறிமுக உரைகளை வைத்தியர் போல் ஜோசப் அவர்களும் கோதை அமுதன் அவர்களும் ஆற்றினார்கள். சிறப்புரைகளை "உதயன்" பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கமும் "கீதவாணி" நடா ராஜ்குமாரும் வழங்கினார்கள். சிவஸ்ரீ குருக்கள் அவர்கள் வரவேற்புரையை சிவஸ்ரீ மணிவண்ணக் குருக்கள் வழங்கினார்கள்.

அனைத்து உரைகளும் காத்திரமாக அமைந்து தங்களை ஆசனங்களில் அமரவைத்திருந்தன என்று சபையில் அமர்ந்திருந்தவர்கள் நிகழ்ச்சியின் இறுதியில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்கள். குறிப்பாக வெளியீட்டு உரை நிகழ்த்திய டாக்டர் சாம்பசிவஸ்ரீ. சோமஸ்கந்த குருஜி அவர்களின் உரையும் இறுதியில் உறுதியுடனும் உவகையுடனும் கருத்தாளமிக்கதாக அமைந்தது என்றால் அது மிகையாகாது.











# எமது மக்களின் வாக்குகளையும் பெற்றுக் கொண்டு இந்த அநுர அரசு எம்மீது அடக்குமுறையை திணித்தால் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுக்கும் ஒரு சூழ்நிலை உருவாகலாம்

## செல்வம் அடைக்கலநாதன் எம். பி.எச்சரிக்கை

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

**- எஸ்.ஆர்.லெம்பேட் (02-05-2025)**

ஜனாதிபதி அல்லது ஜே.வி.பி அரசாங்கமோ இனவாதத்தை அழிப்பதாக அவர்கள் கருதினால் அல்லது பயங்கரவாதமாக இதனை கருதினால் அது அவர்களின் தவறு என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே இனப்பிரச்சினை இருக்கின்றது. அதனை தீர்க்கும் கடமையும், பொறுப்பும் இந்த அரசாங்கத்திடம் இருக்கின்றது.

இனவாதத்தை ஒழிப்போம் என்று மீண்டும் எங்கள் மீது எமது மக்களின் வாக்குகளையும் பெற்றுக்கொண்டு இந்த அரசாங்கம் எங்கள் மீது அடக்குமுறையை திணிக்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்குமாக இருந்தால் இந்த அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுக்கும் ஒரு சூழ்நிலை ஏற்படும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ரெலோ கட்சியின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் வைத்து 2ம் திகதி அன்று வெள்ளிக்கிழமை மாலை ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு மன்னார் மாவட்டத்தில் நிர்ணயிக்கக் கூடிய ஒரு சக்தியாக திகழும்.மன்னார் நகர சபை உள்ளடங்களாக அனைத்து சபைகளிலும் யாருடன் கூட்டு சேர்ந்து ஆட்சி அமைப்பது குறித்து உரிய நேரத்தில் முடிவெடுப்போம்.

குறிப்பாக தமிழ் தேசியத்தை நேசிக்கும் கட்சிகளுடன் எமது கலந்துரையாடல்கள் இடம் பெறும். அவர்களுடன் இணைந்து உள்ளூராட்சி சபைகளை அலங்கரிக்கும் நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுப்போம்.

தேசியத்துடன் இருக்கின்ற தமிழ் கட்சிகள் ஓரணியில் திரள கூடிய அஸ்திவாரமாக அமையும். அந்த வகையில் இந்த ஒற்றுமை என்பது மாகாண சபை தேர்தல் வந்தாலும் கூட குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் மக்களுக்கு ஏற்படக்கூடிய பிரச்சனை எதுவாக இருந்தாலும் ஒற்றுமையாக நாங்கள் செயல்படக்கூடிய ஒரு சூழலை மக்கள் ஆதரிக்கக்கூடிய ஒரு வாய்ப்பு உள்ளது.

உள்ளூராட்சி சபைகளில் ஒற்றுமை வெளிப்படுகின்ற போது தொடர்ச்சியாக நாங்கள் சேர்ந்து பயணிக்கக்கூடிய சில நேரங்களில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு என பயணிக்கக்கூடிய ஒரு அஸ்திவாரத்தை இடுகின்ற ஒரு சந்தர்ப்பத்தை நாங்கள் இதனால் ஏற்படுத்தி கொள்ள முடியும். மன்னார் மாவட்டத்தில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிர்ணயிக்கின்ற ஒரு சக்தியாக இருக்கும்.

என்.பி.பி. நாட்டின் பல பிரதேசங்களில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடுகின்றனர். அவர்கள் இனவாதத்தை ஒழிப்பதாக தெரிவிக்கின்றார்கள். அதற்காக பாரிய சட்டங்களை கொண்டு வருவதாகவும் கூறுகிறார்கள்.

எங்களுடைய இனம் இந்த நாட்டிலே சுதந்திரமாக தமது நிலத்தில் வாழக்கூடிய அனைத்து உரித்துக்களையும் கொண்ட இனமாக தமிழினம் இருக்கின்றது.

குறிப்பாக வடக்கு கிழக்கில் பூர்விகத்தை கொண்ட ஒரு பிரதேசமாக இருந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில் எமது இனத்திற்கு ஏற்படுத்துகின்ற அநீதிகளை தட்டிக்கேற்கின்ற வகையில் ஜனநாயக போராட்டங்கள், ஆயுதப் போராட்டங்கள் இடம் பெற்றது.

அதற்கான தியாகங்களை எமது இளைஞர் யுவதிகள், பொதுமக்கள் எல்லோறும் தியாகம் செய்துள்ள வரலாறு இன்றைக்கும் உள்ளது. இந்த வரலாற்றின் தன்மைதான் ஐ.நா. சபை வரைக்கும் கதவை தட்டி உள்ளது என்பது உண்மை.

எனவே பயங்கரவாத தடைச் சட்டம் ஒழிக்கப்பட வேண்டும். இனவாதம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதை ஏற்க முடியாது. நாங்கள் இனத்தின் பால் எங்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகளையும் எங்கள் தேசத்தை கட்டிக் காக்கின்ற வகையில் எமது உரிமைகளை நாங்கள் தக்க வைக்கின்ற வகையிலும், நாங்கள் ஒரு தனித்துவமான இனம் என்பதை கூறிக் கொள்ளும் வகையிலும் எங்களுடைய போராட்டங்கள் அமைந்துள்ளது.

அந்த வகையில் ஜனாதிபதி அல்லது ஜே.வி.பி அரசாங்கமோ இனவாதத்தை அழிப்பதாக அவர்கள் கருதினால் அல்லது பயங்கரவாதமாக இதனை கருதினால் அது அவர்களின் தவறு என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே இனப்பிரச்சினை இருக்கிறது. அதனை தீர்க்கும் கடமையும், பொறுப்பும் இந்த அரசாங்கத்திடம் இருக்கின்றது.

இனவாதத்தை ஒழிப்போம் என்று மீண்டும் எங்கள் மீது எமது மக்களின் வாக்குகளையும் பெற்றுக்கொண்டு இந்த அரசாங்கம் எங்கள் மீது அடக்குமுறையை திணிக்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்குமாக இருந்தால் இந்த அரசாங்கத்திற்கு ஒரு எச்சரிக்கை விடுக்கும் ஒரு சூழ்நிலை ஏற்படும்.

எனவே அரசாங்கம் எமது இனப்பிரச்சினை தீர்வுக்கு கவனம் செலுத்த வேண்டும். அதை தட்டிக் கழிக்கும் வகையில் இனப்பிரச்சினையை ஒழிப்போம் என்பதை ஏற்க முடியாது.என அவர் மேலும் தெரிவித்தார்.

# MORTGAGE

## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL RESIDENTIAL VACANT LAND

INDUSTRIAL CONSTRUCTION



## OUR SERVICE



- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US

**NESAN**

**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation

NESAN SUBRAMANIAM

Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · First National Financial LP · TD Canada Trust · Manulife · National Bank · Desjardins · RFA · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# 2009 முள்ளிவாய்கால் பேரழிவின் போது ராஜபக்ஷ குழுவுடன் கிரிபத் உண்டு கொண்டாடிய சாணக்கியன் என்பவர் தமிழரசு கட்சிக்குள் எப்படி வந்தார்?

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி தேசிய அமைப்பாளர் த.சுரேஸ் காட்டம்

கனகராசா சரவணன்

எங்கள் மண்ணிலே எங்கேயே இருந்து வந்து தமிழர்களை காட்டி சிங்களத்துடன் சேர்ந்து கூத்தடிக்கின்ற சாணக்கியனுக்கு மாலை போட்டு வரவேற்பது வெக்க கேடானது அதேவேளை தமிழர்களின் உணர்வுகளையும் விடுதலைப் புலிகளின் தியாகங்களால் உருவாக்கப்பட்ட வீட்டில் நாகபாம்புகள் இருக்கின்றது என தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி தேசிய அமைப்பாளர் த.சுரேஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு போரதீவுபற்று பிரதேச சபை தேர்தலில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி சைக்கிள் சின்னத்தில் துப்பங்கேணி வட்டாரத்தில் போட்டியிடும் வேட்பாளர் குமாரசிங்கம் ஆதரித்து 2ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை துரவணையடி ஊற்று பிரதேசத்தில் இடம்பெற்று கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் தமிழர்களை அடிமையாக்கி கொண்டிருக்கும் வேளையில் மறைந்த சம்மந்தனுக்கு கோடான கோடி மாளிகையும் குண்டு துளைக்காத வாகனமும் ஏன் கொடுக்கப்பட்டது என மக்களும் புத்திஜீவிகளும் நன்கு சிந்திக்கவேண்டும்.

நீங்கள் அரசியலில் ஈடுபடாவிட்டால் உங்களை பிழையானவர்கள் ஆழக் கூடிய சூழ்நிலை ஏற்படும் அறிஞர் பிளட்டோ சொல்லுகின்றார். எனவே நாங்கள் 2009 பின்னர் எமது மக்கள்வீட்டுச் சின்னத்துக்கு நம்பி வாக்களித்தனர் அவர்கள் ஒரு கொள்கையும் இல்லாமல் இருந்த காரணத்தினால் இன்று ஜே.வி.பி வடக்கு கிழக்கில் முன்னிற்கின்றது.

இது யார்விட்ட தவறு தமிழர்கள் பிரிந்து நின்று எத்தனை கட்சியில் கேட்டால் நாங்கள் யாருக்கு போடுவது என மக்களிடம் இருந்துவரும் வார்தைகள் இதற்கு அடிப்படை காரணம் யார்? எந்த நோக்கத்துக்காக அந்த கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதே அது சின்னாபின்னமாக சிதறடித்து கூட்டமைப்பு என்ற சொல்லுக்கே இடமில்லாமல் அந்த தமிழரசு கட்சி வீட்டுக்குள்ளே ஒரு நாக பாம்பு படுத்துகிடக்கின்றது.

தமிழரசு கட்சிக்குள்ளே கள்ளவழியே வந்து எம். சுமந்திரன் 8 நாடாளுமன்ற உறுப்பினர்களை தனது கட்டுப்பாட்டில் வைத்து வழி நடாத்துகின்றார். அவ்வாறே மட்டக்களப்பில் வந்தவர் 2009 முள்ளிவாய்கால் பேரழிவு நடக்கும் போது ராஜபக்ஷ குழுவுடன் கிரிபத் வெட்டி கொண்டாடியதுடன் சின்னவத்தையில் விகாரையை புனர் நிர்பானிப்பதற்கு அமைச்சரை அழைத்து விகாரை அமைத்தவர் தமிழரசு கட்சிக்குள் எப்படி வந்தவர் மக்கள் சிந்திக்கவேண்டும் வடக்கு கிழக்கில் ஏன் விகாரை அவரின் நோக்கம் என்ன?

தமிழர்கள் என்ன நோக்கத்துக்காக எதிர்த்து போராடினார்களே அந்த ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை நிறைவேற்றுவதற்காக 2015 இருந்து 2019 வரைக்கும் நல்லாட்சி என்ற பேர்வையில் கொண்டுவரப்பட்ட அரசாங்கம் புதிய உருவாக்கிய ஏக்கிய இராஜ்யம் அரசியல் அமைப்பில் தற்போது வடக்கு மக்களால் திட்டமிட்டு தோற் கடிக்கப்பட்ட சுமந்திரன், சித்தாத்தன் உட்பட ஆறுபேர் இருந்தனர்.

இவர்கள் தமிழர்களின் போராட்டத்தை மழுங்கடிக்க செய்து ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை தமிழர்கள் ஏற்றுக் கொள்ளும் விதமாக அந்த அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டது இதன்போது எமது கட்சி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவரின் தலைமையில் வடக்கு கிழக்கிலே "எழுக தமிழா" என மக்கள் அணியை திரட்டி அந்த அரசியல் அமைப்பை தோற்கடித்தோம்.

இன்று பல பொய்களை கூறி வந்த என்.பி.பி ஜனாதிபதி அந்த





கிடைப்பிலே கிடக்கும் புதிய அரசியல் அமைப்பை பரிசீலிப்பதாக தெரிவித்துள்ளார் இந்த நிலையில் பாராளுமன்றத்தில் உள்ள தமிழ்கட்சி எம்பிக்கள் 10 பேரும் சேர்ந்து அரசாங்கம் கொண்டுவரவுள்ள இந்த அரசியல் அமைப்பை தோற்கடிக்க ஒன்றிணைய பேச்சுவார்தையில் ஈடுபட்டோம் அதனை சுமந்திரன் தோற்கடித்தார்.

எனவே இந்த புதிய அரசியல் அமைப்பை நிறைவேற்ற துடித்துக் கொண்டிருப்பதுடன் அதற்காக தமிழரசுகட்சி வேகமாக ஓடுகின்றது எனவே இதில் விழிப்படையா விட்டால் நாங்கள் இந்த மண்ணிலே நிரந்தரமாக இரண்டாம் பிரைஜையாக வாழுவோம் எனவே மிக கவனமாக வாக்களிப்பு விடையத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

தமிழர்களின் உணர்வுகளையும் விடுதலைப் புலிகளின் தியாகங்களையும் முன்னிலைப்படுத்தி உருவாக்கப்பட்ட இந்த வீடு அதில் இருக்கின்ற நாகபாம்புகள் எனவே இன்று இருக்கின்ற வீடு தமிழருக்கு உள்ளதல்ல இதனை மக்கள் விளங்கி கொள்ளவேண்டும். அதில் இருந்து பலர் எங்களுடன் இணைந்து கொண்டிருக்கின்றனர்.

இந்த உள்ளூராட்சி தேர்தல் முடிந்ததும் ஒற்றையாட்சி அரசாங்கத்தை தமிழ் மக்களின் விருப்பத்துடன் நிறை வேற்றுகின்ற செயற்பாட்டில் அரசாங்கம் செயற்படும் அதனை நாங்கள் எதிர்போம். வடக்கு கிழக்கு தமிழர்களின் தேசம் தமிழ் மக்கள் சிங்கள மக்கள் போல நிம்மதியாக வாழவேண்டும் அதற்கு சமஸ்டி ஆட்சியே தேவை.

வடகிழக்கை பிரித்ததுடன் தமிழர்களுக்கு என்ன கொடுமைகள் செய்ய வேண்டுமே அந்த கொடுமையில் 50 வீதமாகன பங்கு ஜே.வி.பி செய்துள்ளனர். வரலாற்றை படியுங்கள எனவே சுமந்திரன் சாணக்கியன் போன்றவர்களின் சதி முயற்சியை தோற்கடிப்போம் தமிழரசு கட்சியினை தோற்கடிக்க வேண்டும்.

வீடு வீடு என்று சொல்லி உண்மையை அறியாமல் வாக்களிதீர்களானால் தமிழர்களுடைய இனம் உங்களுடைய பிள்ளைகளின் சந்ததி அழிந்து பௌத்தம் நிலைக்கும். பட்டிருப்பு தொகுதி தமிழ் தேசியத்துக்கான தொகுதி இந்த மண்ணில் ஏகப்பட்ட மாவீரர்கள் தியாகம் செய்துள்ளனர். எனவே நாங்கள் உறுதியாக இருந்து தமிழன் தமிழனை ஆழவேண்டும்.




கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ வெல்வதற்காக பண பரிமாற்றம் நடைபெற்றது அதில் சாணக்கியனுக்கு ஒதுக்கப்பட்ட 40 கோடி நிதியில் குளத்தில் மைதானம் அமைத்ததாக காட்டி பணம் எடுக்கப்பட்டுள்ளதாக குளத்தில் மைதானத்தை தேடுகின்ற சம்பவங்கள் ஊடகங்களில் பார்த்தோம் அவ்வாறே கட்டிடங்கள் கட்டி முடிக்காமல் முடிக்கப்பட்டதாக பணம் மோசடி இடம்பெற்றுள்ளது.

எனவே எங்கேயே இருந்து வந்து கொண்டு தமிழர்களை நாங்கள் பெரிது நீங்கள் பெரிது என காட்டி ஏமாற்று வேலைகளை செய்பவர்களை நீங்கள் இனம் காணவேண்டும். படுவான்கரை மக்களை யாரும் நினைக்கலாம் நாங்கள் என்ன சொன்னாலும் செய்வார்கள் சாராயத்தை அரிசியை கொடுத்தால் வாக்களிப்பார்கள், என படுவான்கரை மக்களை வைத்து தீர்மானங்களை எடுக்கின்றனர்.

ஒவ்வொரு தேர்தல் வரும் போது தேசிய கட்சிகளை சேர்ந்தவர்கள் இந்த வேலைகளை செய்வார்கள் ஆனால் ஒரு விடையத்தில் உறுதியாக இருங்கள் எந்த தலைமைத்துவம் இந்த மண்ணிலே தமிழர்கள் நிம்மதியாக வாழவேண்டும் என யார் போராடுகின்றார்களே அவர்களை ஆதரியுங்கள் அது உங்கள் பிள்ளைகளுக்கு சேர்க்கின்ற சொத்து மாதிரி.

எனவே இந்த மண்ணிலே இங்கேயே இருந்து நீண்டகாலமாக நேர்மையாக செயற்படுகின்ற தமிழுக்காக பாடுபடுகின்றவர்களை நீங்கள் ஆதரிக்கவேண்டும் என்றார்.



# ஒன்றாரியோ மாகாணத்தின் Red Tape Reduction அமைச்சின்பாராளுமன்றச் செயலாளராக நியமனம் செய்யப்பெற்ற மாகாண அரசின் உறுப்பினர் லோகன் கணபதி அவர்களைப் பாராட்டிய முதல்வர் டக் போர்ட்



அண்மையில் ஒன்றாரியோ மாகாணத்தின் Red Tape Reduction அமைச்சின்பாராளுமன்றச் செயலாளராக நியமனம் செய்யப்பெற்ற மாகாண அரசின் உறுப்பினர் லோகன் கணபதி அவர்களைப் பாராட்டிய முதல்வர் டக் போர்ட் அவர்கள் லோகன் கணபதி அவர்களின் சேவை மனப்பான்மையையும் அவரது தொகுதி மக்களுக்கும் ஒன்றாரியோ வாழ் மக்களுக்கும் அரிய சேவையாற்றும் ஒரு மாகாண அரசின் உறுப்பினராக எமது அரசாங்கத்தில் பதவி வகிப்பை தான் பாராட்டுவதாகத் தெரிவித்துள்ளார்.



அன்றை பதவியேற்பு வைபவத்தில் சமூகமளித்த மேற்படி Red Tape Reduction அமைச்சரான அன்றியா அவர்களுக்கும் லோகன் கணபதி அவர்கள் தனது நன்றியையும் தெரிவித்து அவரது அமைச்சிற்கு தன்னாலான பங்களிப்பையும் வழங்குவதாகத் தெரிவித்தார். இந்த அமைச்சின் அதிகாரங்களில் மிக முக்கியமானது ஒன்றாரியோ அரசின் கீழ் வரும் சகல அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களில் ஏற்படும் நேரம் மற்றும் செலவுகள் தொடர்பான விரயங்களையும் தாமதங்களையும் தவிர்க்கும் வகையில் கண்காணிப்புக்களையும் பரிசோதனைகளையும் மேற்கொள்வது என எமது உதயன் பத்திரிகை ஆசிரிய பீடத்திற்கு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தனது "ஐயமிட்டுண்" உணவளிக்கும் திட்டத்தின் மூலம் அறியப்பெற்ற அவுஸ்த்திரேலியா வாழ் கொடையாளர் செல்வராஜாவிற்கு ஒன்றாரியோ பாராளுமன்றத்தில் வழங்கப்பெற்ற உயர் கௌரவம்



கடந்த பல வருடங்களாக தானும் தனது குடும்பத்தினரும் இணைந்து மேற்கொண்டு வதனது "ஐயமிட்டுண்" உணவளிக்கும் திட்டத்தின் மூலம் நன்கு அறியப்பெற்ற அவுஸ்த்திரேலியா வாழ் கொடையாளர் செல்வராஜாவிற்கு ஒன்றாரியோ மாகாண பாராளுமன்ற வளாகத்தில் உயர் கௌரவம் வழங்கும் வகையில் அவரது யாழ்ப்பாண பல்கலைக் கழக சகாவும் நெருங்கிய நண்பருமான மாகாண அரசின் பாராளுமன்றச் செயலாளர் லோகன் கணபதி அவர்கள் ஏற்பாடுகளை கடந்த வாரம் செய்திருந்தார்.

அன்றைய தினம் ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றத்திற்கு கொடையாளர் செல்வராஜா அவர்க்ளை முன் எற்பாடுகள் செய்த வண்ணம் அழைத்திருந்த லோகண் கணபதி அவர்களை கௌரவிக்கும் முகமாக சபை நேரத்தில் சபாநாயகரின் முன் அனுமதி பெற்றும் அவர் பற்றிய அறிமுகத்தை சிறப்பாகச் செய்த போது அங்கு அமர்ந்திருந்த ஆளும் கட்சி அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் மற்றும் எதிர்க்கட்சி ஆசனங்களில் இருந்த அங்கத்தவர்கள் உட்பட அனைவரும் கரகோசம் செய்து அவரைப் பாராட்டினார்கள். அதன்பின்னர் பல அமைச்சர்களுக்கு திரு. செல்வராஜா அவர்களை நேரடியாக அறிமுகம் செய்த லோகன் கணபதி அவர்கள் மாகாண முதல்வர் டக் போர்ட் அவர்களுக்கும் அறிமுகம் செய்து வைத்தார். அப்பொழுது அமைச்சர்கள் பலர் திரு. செல்வராஜா அவர்களை மனமுவந்து பாராட்டி மகிழ்ந்தார்கள்.

ஐயமிட்டுண் புகழ் திரு. செல்வராஜா அவர்களும் அவர் தம் குடும்பத்தினரும் இலங்கையில் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் பாடசாலை மாணவர்களுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவு மற்றும் கல்வி கற்பதற்கு தேவையான உபகரணங்கள் ஆகிய இரண்டையும் தொடர்ச்சியாக வழங்குவதை உறுதி செய்வதற்காக தன்னை அர்ப்பணித்துள்ளார் என்பதும் அதன் காரணமாக அவர்கள் அவுஸ்த்திரேலியா அரசாங்கத்தால் ORDER OF AUSTRALIA என்னும் உயர் கௌரவமும் வழங்கப்பெற்று கௌரவிக்கப்பெற்றார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.





திரு. செல்வராஜாவின் சிறந்த சமூக சேவையை அங்கீகரிப்பதில் ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற இணைந்த மாகாண முதல்வர் மற்றும் அமைச்சர்கள் ஏனைய அங்கத்தவர்கள் ஆகியோருக்கும் திரு. லோகன் கணபதி அவர்கள் தனது நன்றியைத் தெரிவித்தார். மேலும் அவுஸ்த்திரேலியாவின் ORDER OF AUSTRALIA என்னும் உயர் கௌரவத்தை தனது மக்கள் சேவைக்காகப் பெற்ற செல்வராஜா அவர்களின் இந்த "ஐயயமிட்டுன்" மனித நேயப் பணியானது இலங்கையின் வடக்கு-கிழக்கு மற்றும் மலையகம் ஆகிய பகுதிகளும் விரிவாக்கப்பெற்று அத்துடன் இந்த பகுதிகளில் மாணவர்களின் கல்வியறிவை ஊக்குவிப்பதற்காக கணிதம் விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் பரீட்சைகளை நடத்தி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.





இங்கே காணப்படும் படங்களில் ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற வளாகத்தில் அமைச்சர்களினால் திரு. செல்வராஜா அவர்கள் பாராட்டப்பெறுவதையும் தொடர்ந்து மார்க்கம் நகரில் இடம்பெற்ற ஒரு சந்திப்பு நிகழ்வின் போது "உதயன்" பத்திரிகை பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் மற்றும் லோகன் கணபதி ஆகியோருடன் ஐயமிட்டுண் புகழ் திரு. செல்வராஜா காணப்படுவதையும் பார்க்கலாம்.


## மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில் சிறப்பு பூசை

11-05-2025 ஞாயிற்றுக்கிழமை காலை சித்திரா பௌர்ணமி பூசையும், அன்னையர் தினமும் சிறப்புடன் புசைகள் நடைபெறும்.

அன்னையின் அருள் வேண்டி சிறப்புடன் வாழ அனைத்து சக்திகளையும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

80E நாஸ்டீன் வீதி ஸ்காபரோ
தொடர்புகளுக்கு: (647) 436-9647

# இவ்வார ராசிபலன்

**09-05-2025 வெள்ளி தொடக்கம் 15-05-2025 வியாழன் வரையும்**



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

**"ஜோதிட மகரிஷி"**
**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: **0091-9840160068 9940431377**




**மேஷம்:** புதிய வாய்ப்புக்கள் வரும். பொல்லாத காரியங்கள் சொல்லாமல் விலகும். புத்தி சாதுர்யம் கூடும். புத்திரர் வழியில் சந்தோஷம் கூடும். புதிய வாகனம் சேரும். தீய எண்ணம் விலகும். ஜீவன முன்னேற்றம் ஏற்படும். திடீர் தனவரவு ஏற்படும். அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். செயல் திறமை அதிகரிக்கும். கடன்சுமை அதிகரிக்கும். கடின உழைப்பு தேவைப்படும். கால்நடைகளால் லாபம் தரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். விருந்தினர் வருகை உண்டு. வீண் செலவுகள் குறையும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். அரசியலில் புகழ் சேரும். முகப்பொலிவு கூடும். முயற்சி பலன் தரும். குதூகலம் தழைத்தோங்கும். நிலம் வாங்கும் யோகம் உண்டு. கல்விக்கடன் ஏற்படும். குடும்ப மன நிறைவு தரும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். நிர்வாகத் திறன் கூடும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். நல்லோர்கள் நட்பு ஏற்படும். பணவிரயம் ஏற்படும். சொத்துக்கள் சேரும். கணவன், மனைவி சலசலப்பு ஏற்படும். வாழ்க்கை வசதி பெருகும். வாழ்வு நிலை உயரும். மனவேதனை குறையும். கல்வியில் கவனம் குறையும். போட்டிகள் மறையும். லாபம் திருப்தி தரும். மன அமைதி கூடும். மற்றவர் தொல்லை நீங்கும். குடும்ப ஒற்றுமை ஓங்கும். வெற்றி நிலை தொடரும். இடமாற்றம் நன்மை தரும். பதவியில் உயர்வு வரும். நண்பரால் சங்கடம் நேரிடும். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனலட்சுமி, அதிர்ஷ்ட எண்: 2,1,5,9
அதிர்ஷ்ட நிறம்: பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,P




**ரிஷபம்:** ஆசைகள் நிறைவேறும் வாரம். நண்பரால் சங்கடம் நேரும். நடவடிக்கையில் மாற்றம் ஏற்படும். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் சேரும். பெற்றோர்களால் பாராட்டப் பெறுவீர்கள். செயல் விவேகம் கூடும். தனவரவு உற்சாகம் தரும். பணிமாற்றம் நன்மை தரும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். கற்பனை ஆற்றல் பெருகும். பெண்களின் திறமை வெளிப்படும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். மனை வாங்கும் சிந்தனை உண்டு. மனைவியால் ஆறுதல் உண்டு. அதிர்ஷ்ட வாய்ப்பு கூடி வரும். தொலைத்தூர பயணம் லாபம் தரும். பணிச்சுமை குறையும். வியாபார மந்தநிலை அகலும். கடன் உதவி கிட்டும். அதிகாரியின் ஆதரவு பெருகும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். ஆன்றோர் வாழ்த்து கிட்டும். வியாபார வளர்ச்சி உண்டு. கொடுக்கல், வாங்கலால் நன்மை சேரும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். ஆரோக்கிய அபிவிருத்தி ஏற்படும். பிள்ளைகள் கல்வி மேம்படும். திண்டாட்டங்கள் குறையும். திறமைகள் வெளிப்படும். பெருமைகள் கூடி வரும். வாய்ப்பேச்சில் கவனம் தேவை. விசேஷ பலன்கள் உண்டு. வறுமை நிலை மாறும். வஸ்திர தான பிரார்த்தனையால் வளமும், நலமும், ஜெயமும் உண்டாகும். ஏஜென்சி தொழில் ஏற்றம் தரும். எண்ணங்கள் மாற்றம் தரும். உழைப்பு உயர்வு தரும். விவசாயம் விளைச்சல் தரும். கடன் பிரச்சனை தீரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,K




**மிதுனம்:** எதிர்பார்த்த காரியம் நடக்கும் வாரம். காரிய அனுகூலம் தரும். பூர்வீகச் சொத்து வரும். புத்தாடை, ஆபரணம் சேரும். புதிய தொழில் வாய்ப்புக்கள் வரும். மனதெளிவு கிட்டும். மனைவியின் அன்பு கிட்டும். மற்றவர் உதவி கிட்டும். உறவினர்கள் பாராட்டு கிட்டும். உத்தியோக உயர்வு கிட்டும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கலைத்தொழிலில் உயர்வு கிட்டும். எதிர்பாராத ஏற்றம் கிட்டும். இனிப்பானச் செய்திகள் வரும். கோதுமை தானப் பிரார்த்தனையால் குலவிருத்தி சேரும். மனை வாங்கும் சிந்தனையும், மனதில் உள்ள காதலும் பூர்த்தியாகும். ஆடம்பர சுகங்கள் கூடும். ஏற்றமான தருணம் அமையும். மாற்றமான வாய்ப்புக்கள் கிட்டும். மற்றவர்களால் மனஅமைதி கெடும். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். மாணவர்களுக்கு கல்வியில் தடை ஏற்படும். தெய்வீகப் பற்று கூடும். வியாபாரம் செழிக்கும். வீண் செலவு குறையும். புதிய நட்பை தவிர்க்கவும். புத்திரர் வழியில் கவலை ஏற்படும். போட்டிகள் நீடிக்கும். புதிய முதலீடு தவிர்க்கவும். வெளிநாட்டுப் பயணம் ஏற்படும். வாழ்க்கை வசதி பெருகும். அரசாங்க அனுகூலம் கூடும். இளமையோடும், பெருமையோடும் காட்சியளிப்பீர்கள். பிள்ளைகள் வகையில் இருந்த தொல்லைகள் விலகும். தீர்த்த யாத்திரைகள் உண்டு. வீண் வம்பு தேடி வரும். வியாபாரம் திருப்தி தரும். பழைய நட்பால் பணவிரயம் உண்டு. கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். காரியத்தடை அகலும். நல்ல வாய்ப்புக்கள் நாடி வரும். நல்லவர் நட்பு கூடி வரும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். புத்திரரால் பூரிப்பு உண்டு. இல்லத்தில் மகிழ்ச்சியுண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: சந்திரபகவான், அதிர்ஷ்ட எண்: 5,3,2,9
அதிர்ஷ்ட நிறம்: வெளிர்நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K ,A




**கடகம்:** வீரியத்தோடு செயல்படும் வாரம். இரும்புத்தொழில் லாபம் உண்டு. சங்கடங்கள் அதிகமாகும். அரசியலில் ஆதாயம் உண்டு. வேலைப்பளு கூடும். அரிசி தானப் பிரார்த்தனையால் ஆயுள் விருத்தி உண்டாகும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். வியாபாரத்தில் வெகு லாபம் கிடைக்கும் காலம். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். திருமணம் கூடி வரும். மாணவர் பாராட்டு பெறுவர். அரசு வழி ஆதாயம் உண்டு. புதிய வாய்ப்பு தேடி வரும். உணவு விடுதி லாபம் தரும். இனிக்கும் சம்பவம் அமையும். தொழில் நிம்மதி கொடுக்கும். சகோதரியால் லாபம் உண்டு. உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். விவசாய நிலம் சேரும். வேண்டிய உதவி கிட்டும். விரக்தி நிலை மாறும். குதூகலப் பயணம் உண்டு. குடும்ப மேன்மை உண்டு. திருமண வாய்ப்பு கூடி வரும். கேட்ட இடத்தில் பணம் வரும். எள் தானப் பிரார்த்தனையால் ஏற்றமும், மாற்றமும் உண்டாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். நண்பர்கள் கவனம் தேவை. முயற்சி பலன் தரும். பழிச்சொல் தேடி வரும். காரியம் இழுபறியாகும். சுபிட்ஷம் பெருகும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. கால்நடைகளால் பலன் உண்டு. வருமானத் தடை உண்டு. பணியாட்களால் தொல்லை ஏற்படும். கல்வியில் மந்த நிலை காணப்படும். வீடு, மனை யோகம் உண்டு. நிர்வாகத் திறமை அதிகரிக்கும். கடவுள் பிரார்த்தனை எதுவாக இருந்தாலும் கைமேல் பலன் கிடைக்கும். ஆரோக்யம் அதிகரிக்கும். ஆதாயம் மிகுதியாகும். கஷ்ட காலம் விலகும். சுபச்செய்திகள் வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காமாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 4,7,9,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,V




**சிம்மம்:** உடல்நலம் ஷேமம் தரும் வாரம். பயணம் லாபம் தரும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். தொழில்போட்டி அதிகமாகும். புதிய கடன் உருவாகும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். உடல்நலத்தில் கவனம் தேவை. வாகனச் செலவுகள் அதிகரிக்கும். பெற்றோர்களின் ஆதரவு அதிகரிக்கும். பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். வேற்றுமைகள் விலகும். வெறுப்புக்கள் அகலும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். மனநிறைவு உண்டாகும். குடும்ப உறவு பலப்படும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். பயணம் தடைப்படும். வணிகத்தொழில் விரிவடையும். விவசாயிகளுக்கு ஏற்றமான தருணம். பணவரவு திருப்தி தரும். பல் வலி வந்து போகும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பெண்களால் பெருமை சேரும். முயற்சிகள் பலிதமாகும். அணிகலன் சேர்க்கையுண்டு. வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வீண் விரயம் தவிர்க்கவும். காரியத்தில் வெற்றி கிடைக்கும். கனவுகளும், ஆசைகளும் நிறைவேறும். கௌரவம் அதிகரிக்கும். குடும்ப மேன்மை உண்டாகும். உடல் சோர்வு ஏற்படும். ஆடம்பரப் பொருள் சேரும். திருஷ்டிகள் விலகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். தெளிவான முடிவுகள் உதயமாகும். செல்வச் செழிப்பு உயரும். விவேகம் கை கொடுக்கும். வெற்றி வீடு தேடி வரும். நினைத்தது நிறைவேறும். மின்சாரத்தில் கவனம் தேவை. குடும்ப கௌரவம் உயரும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். கருத்து வேறுபாடுகள் அகலும். மாணவர்களுக்கு கல்வியில் அக்கறை தேவை. அச்சுத்தொழில் ஆதாயம் தரும். பொறுமையைக் கையாள வேண்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீராமர், அதிர்ஷ்ட எண்: 4,5,6,9
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,C




**கன்னி:** பணவரவு திருப்தி தரும் வாரம். சவாலான விஷயங்களை சமாளித்து சாதனை நிகழ்த்தும் காலம். பழையக் கடன் தீரும். அச்சத்தை தவிர்ப்பது நல்லது. வியாபாரம் செழிக்கும். பொறுப்புக்கள் கூடும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு உண்டு. உறவினர்களால் அலைச்சல் உண்டு. மனோ பயம் ஏற்படும். முதுகில் வலி வந்து போகும். திடீர் பயணம் உண்டு. மாணவர்கள் படிப்பில் கவனம் தேவை. உடன்பிறப்பால் உதவி உண்டு. சுபச்செலவு அதிகரிக்கும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். கணவன் அன்பு அதிகரிக்கும். பணப்பிரச்சனைத் தீரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். பிரியமானவர்களின் சந்திப்பு கிட்டும். பழைய பாக்கிகள் வசூலாகும். முற்போக்கு சிந்தனை வரும். சோம்பல் அதிகரிக்கும். திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புத வாய்ப்பு கிட்டும். பெண்களின் ஆலோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. குளிர்பானத் தொழில் கவனம் தேவை. செயல் விவேகம் கூடும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். பங்குத்தொழில் பணம் தரும். பெத்தவங்க ஆசியும், மத்தவங்க வாழ்த்தும் கிடைக்கும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். பிரபல்ய ஆசை ஏற்படும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. கண் நோய் வந்து போகும். கால்நடைகளால் லாபம் உண்டு. பரபரப்பு இல்லாமல் பணவரவு பெருகும் காலம்.

வழிபட வேண்டிய தெய்வம்: தட்ஷிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 6,9,1,4
அதிர்ஷ்ட நிறம்: ஊதாநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,U




**துலாம்:** சாதகமான சூழ்நிலை உருவாகும் வாரம். பொன் பொருள் சேர்க்கையுண்டு. மருத்துவச் செலவு உண்டு. அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். நண்பர்களால் நன்மையுண்டு. பாதகமான சூழ்நிலைகள் காணப்படும். பணியாட்கள் ஆதரவு அதிகரிக்கும். பூர்வீகச் சொத்துக்கள் சேரும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். வாகனச் செலவுகள் அதிகரிக்கும். உடல்நலத்தில் கவனம் தேவை. ஆக்கப்பூர்வமான எண்ணங்கள் உதயமாகும். உத்தியோக உயர்வு கிட்டும். பயணம் அனுகூலம் தரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். பணப்பிரச்சினை தீரும். வியாபாரம் சிறக்கும். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். கிருபைகளும், பெருமைகளும் கிடைக்கும். காரிய வெற்றி கிட்டும். துயரங்களையும், தோல்விகளையும் தாண்டி உயரங்களைத் தொடும் காலம். குடும்ப ஒற்றுமை கூடும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரி தொல்லை ஏற்படும். சங்கடம் அதிகரிக்கும். பணியில் கவனம் தேவை. குடும்ப சச்சரவு ஏற்படும். அரசியல் ஆதாயம் உண்டு. புண்ணியம் சேரும். கலைத்துறையில் முன்னேற்றம் கொடுக்கும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். தோற்றப் பொலிவு கூடும். பொறியியல் துறை லாபம் தரும். ஆடை, அணிகலன் சேரும். உடல்நலம் திருப்தி தரும். தொலைநோக்கு சிந்தனை உருவாகும். விலைமதிக்க முடியாத வெகுமானம் கிடைக்கும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 7,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,J




**விருச்சிகம்:** போட்டி, பொறாமைகள் விலகும் வாரம். புண்ணியம் சேரும். நிதி நிறுவனம் லாபம் தரும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். வாகன யோகம் உண்டு. மாணவர் மதிப்பு உயரும். வேண்டிய உதவி கிட்டும். வாகனயோகம் அதிகரிக்கும். வகையான செல்வம் சேரும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். பணம் புரளும். பூமியால் நன்மை தரும். செலவுகள் தவிர்க்கவும். வேலைப்பளு அதிகரிக்கும். பொறாமைகள் விலகும். புதியப்பொருள் சேரும்.

***(தொடர்ச்சி 22 பக்கம்)***


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# இவ்வார ராசிபலன்

(20 பக்கத் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** வழக்குகள் திருப்பம் தரும். செல்வாக்கு அதிகமாகும். இடமாற்றம் நன்மை தரும். விவாதம் தவிர்ப்பது நல்லது. பெற்றோர் நலம் கவனம் தேவை. சகோதர விசுவாசம் கூடும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. பயணம் லாபம் தரும். அரசியலில் பொறுமை தேவை. வீண் வம்பு விலகும். பாதகமான சூழ்நிலை விலகும். வினோதமான எண்ணங்கள் விலகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. ஆசைப்பட்ட வாழ்க்கை அமையும். பிரியமானவர்களின் சந்திப்பு கிட்டும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். மனைவியால் மரியாதை உயரும். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. தொழில் போட்டி அதிகமாகும். மருத்துவச் செலவு கூடும். பணவரவு திருப்தி தரும். முயற்சிகள் பலிதமாகும். சேமிக்கும் எண்ணம் மேலோங்கும். தனவரவு பெருகும். மேன்மைகள் அதிக அளவில்

நடைபெறும். சாமர்த்தியமாக செயல்படுவீர்கள். வீண் வம்பு அகலும். வியாபாரத்தடை ஏற்படும். ஆரோக்கியம் கவனம் தேவை. விவாக முயற்சி வெற்றி தரும். உடல் உபாதை நீங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: 3,1,9,6

அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,P




**தனுசு:** கலகலப்பான வாரம். வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். அரசு வகையில் ஆதாயம் உண்டு. உறவினரால் அனுகூலம் உண்டு. நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். நிதி நிலைமை சீராகும். முயற்சிகள் வெற்றி தரும். ஆரோக்கியம் கவனம் தேவை. விவாக முயற்சி வெற்றியை தரும். உடல் உபாதை நீங்கும். உறவினரால் பண விரயம் உண்டு. சுபகாரியம் கைகூடும். வேலை பளு அதிகரிக்கும். பொறுப்புக்கள் கூடும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். நிதி நிலைமை சீராகும். முயற்சிகள் வெற்றியைத் தரும். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர். உறவினர்களால் அனுகூலம் உண்டு. அரசு வகையில் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். சாதுர்யமான பேச்சுக்களால் சாதகமான சூழ்நிலைகளை சந்திப்பீர்கள். முத்தான வாய்ப்பு பெருகும். ஸ்திர சொத்து சேரும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். சுயநலம் கூடும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். பணவரவு உண்டு. திருப்புமுனை ஏற்படும். வருத்தங்கள் மறையும். திருத்தமான முடிவு ஏற்படும். காதல் கசக்கும். விவசாயம் பலன் அளிக்கும். பாதகம் விலகும். பொன், பொருள் சேரும். மருத்துவச் செலவு உண்டாகும். மங்களச் செய்தி வரும். குடும்ப வளர்ச்சி கூடும். பழையக் கடன் வசூலாகும். புதிய நட்பு உருவாகும். கல்வியில் ஆர்வம் கூடும். கட்டிட தொழில் லாபம் தரும். பங்குத்தொழிலில் கவனம் தேவை. பதவி வாய்ப்பு வரும். பிள்ளைகளால் தொல்லைகள் உண்டு. வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். தந்தையின் உடல்நலம் கவனம் தேவை. ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். வாகனச் செலவுகள் ஏற்படும். பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனலட்சுமி, அதிர்ஷ்ட எண்: 9,5,4,7

அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**மகரம்:** நியாயமான ஆசைகள் நிறைவேறும் வாரம். கால்நடைகளால் லாபம் உண்டு. கவலைகள் விலகும். கண் நோய் வந்து போகும். கடன் வாங்க நேரிடும். கலைத்தொழில் லாபம் தரும். திடீர் திருப்பம் ஏற்படும். பதவி உயர்வு கிட்டும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. தொழில் வாய்ப்பு கூடி வரும். பிரபல்ய ஆசை ஏற்படும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். புதிய நட்பு உருவாகும். மனைவியால் மரியாதை உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தகுதிகள் மிகுதியாகும். மனநிறைவுகள் உண்டாகும். குடும்ப உறவு பலப்படும். மிகையான நன்மைகள் கிட்டும். முறிந்து போன உறவுகள் மகிழ்ந்து வந்து இணையும் காலம். வெற்றிகள் குவியும். பாராட்டுக்கள் அதிகமாகும். உத்தியோக உயர்வு உண்டு. சாதகமான வாய்ப்பு உருவாகும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. மனைவியின் அன்பு அதிகரிக்கும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டாகும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆரோக்யம் அதிகரிக்கும். கலகலப்பான செய்திகள் வரும். ஆபத்துக்கள் விலகக்கூடிய மகத்தான காலம். ஆலய தரிசனத்தால் ஆத்ம பலன் பெறக்கூடிய அற்புதமான காலம். நன்மைகள் நாடி வரும். வராத கடன் வந்து சேரும். ஆண்கள் அதிகாரம் உயரும். நட்பு வட்டம் விரிவடையும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். பேச்சில் நிதானம் தேவை. திட்டம் வெற்றி பெறும். நட்டம் இல்லாத நன்மை அதிகரிக்கும். சட்டம் சாதகமாகும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். திருப்பு முனை ஏற்படும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். சாதனையான எண்ணங்கள் உதயமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வலம்புரி விநாயகர், அதிர்ஷ்ட எண்: 7,9,4,3

அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,K




**கும்பம்:** எதார்த்தமாக செயல்படும் வாரம். எதிர்கால எண்ணம் நிறைவேறும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். வரவு திருப்தி தரும். காரிய தாமதம் ஏற்படும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஆடை, அணிகலன்கள் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பழையக்கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். மேலான ஆசியும் மேதைகளின் நட்பும் கிடைக்கும். வீடு, மனை வாங்கும் யோகம் கிடைக்கும். பணியில் கண்டிப்பு அவசியம். தொழில் லாபம் பெருகும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பெண்களுக்கு யோகம் கூடும். விளையாட்டுத் துறையில் லாபம் தரும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். வேலைப்பளு அதிகரிக்கும். ஐஸ்வர்யம் சேரக்கூடிய அற்புதமான காலம். ஆபரணப் பொருள்கள் சேரும். எண்ணிய காரியம் கைக்கூடும். தொழிலில் எதிர்பாரா லாபம் சேரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். நண்பரால் சங்கடம் நேரும். பதவியில் உயர்வு வரும். வெற்றி நிலை தொடரும். ராகு காலப் பிரார்த்தனையால் "ராஜயோகம்" கிடைக்கும். நன்மதிப்பு உருவாகும். வாடும் நிலை விலகி வீடு நிலமும் வாங்கும் காலம். தோற்றப் பொலிவு கூடும். வேற்று மனிதரால் வசதி உண்டு. பொதுப்பணியில் ஆர்வம் கூடும். சுபகாரியம் கூடி வரும். அரசியலில் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்ப தொல்லைத் தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். இனிய வாய்ப்புக்கள் கூடி வரும். கல்விக்கடன் உண்டாகும். பயணம் நன்மை தரும். அளவான பேச்சு ஆறுதல் தரும். கடன் உபத்திரவம் குறையும். உறவினர் பாராட்டுக் கிட்டும். மகிழ்ச்சியான செய்தி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீவிஷ்ணு, அதிர்ஷ்ட எண்: 4,1,3,5

அதிர்ஷ்ட நிறம்: வெளிர் நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K




**மீனம்:** ஆதாயம் கிடைக்கும் வாரம். உற்சாகம் மேலோங்கும். வறுமை நிலை மாறும். வாழ்த்துக்கள் வந்து சேரும். வாய்பேச்சில் நிதானம் தேவை. நிர்வாக அலைச்சல் கூடும். வெளியூர் பயணம் உண்டு. அரசியல் ஆதாயம் உண்டு. வியாபார லாபம் உண்டு. விசேஷ பலன்கள் உண்டு. சொந்த தொழில் அமையும். தொலைத்தூ ர பயணம் லாபம் தரும். துன்பம் விலகும் காலம். மனைவி மக்களால் மகிழ்ச்சி ததும்பும். தீய எண்ணம் விலகும். அரசு பணியில் மாற்றம் வரும். நிதி நிலைமை சீராகும். மற்றோரின் வாழ்த்துக் கிடைக்கும். புத்தாடை ஆபரணம் சேரும். அனுகூலமான போக்கு நிலவி வரும். கடனால் பிரச்சனை வரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். மனதெளிவு கிட்டும். கலைத்தொழில் உயர்வு பெறும். வம்புதும்புகள் ஒழியும். புதிய சொத்துக்கள் சேரும். காரியம் கைக்கூடும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். விளைச்சல் அதிகமாகும். வெளியூர் பயணம் லாபம் தரும். அந்தஸ்து கூடும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. எதிலும் நிதானம் தேவை. புத்தாடை சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்பு உண்டு. நிலையான சந்தோஷம் உண்டு. அரசு உதவிள் கிடைக்கும். கூட்டுத்தொழிலில் பிரிவு ஏற்படும். அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். காதலில் கண்ணியம் கூடும். பெரியோர்களிடம் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். கல்வியில் மேன்மை கிட்டும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். தொழில் சிக்கல் மறையும். நிம்மதி பெருகும். இனிய செய்தியால் மனம் மகிழும். இடமாற்றம் தடைப்படும். கமிஷன் தொழில் லாபம் தரும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. எதிரிகள் பலம் குறையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சித்ரகுப்தர், அதிர்ஷ்ட எண்: 8,4,3,1

அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,P

# வன்னியில் ஒரு பொலிஸ் குழு சிறுவனை "தூக்கி அடிக்கப்போவதாக" அச்சுறுத்துகிறது




பொலிஸ் அதிகாரிகள் எனக் கூறிக்கொண்டு, சிவில் உடையில் தனது வீட்டுக்கு வந்த ஆண்கள், தமது பிள்ளைகளை அச்சுறுத்தியதால், தான் எவ்வாறு கடுமையான துன்புறுத்தலுக்கு ஆளாக நேரிடுகிறது என்பதை, வன்னியைச் சேர்ந்த தமிழ்ப் பெண்ணொருவர் ஊடகங்களிடம் வெளிப்படுத்தியுள்ளார்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் தானும் ஒரு கடத்தலுக்கு ஆளானதாகவும், அது தொடர்பான வழக்கு விசாரணை நடைபெற்று வருகையில் பொலிஸார் இவ்வாறு நடந்துகொள்வது பெரும் அச்சுறுத்தல் என, முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், முல்லைத்தீவு, சிலாவத்தை, தியோநகரைச் சேர்ந்த சந்திரமோகன் சந்தியா குற்றஞ்சாட்டியுள்ளார்.

"வெளிநாட்டில் உள்ள நபர் ஒருவரின் தூண்டுதலின் பேரில் கடந்த மார்ச் மாதம் நான் கடத்தப்பட்டேன். அது தொடர்பான வழக்கு நீதிமன்றில் நடைபெற்றுவருகிறது. ஆனால் இந்த சம்பவத்தின் பின்னர் சிஐடி பொலிஸ் பிரிவில் இருந்து வருகின்றோம். ஸபெசல் பிரான்ஜில் இருந்து வருகின்றோம் என கூறிக்கொண்டு எமது வீட்டுக்கு வருகை தந்து நாங்கள் இல்லாத நேரத்தில் சிறுவர்களான எமது பிள்ளைகளை அச்சுறுத்தும் தொனியில் கதைக்கின்றனர். இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட தரப்பு நான்தான். ஆனால் அவர்களின் விசாரணைகள் என்னுடைய கடந்த காலத்தை பற்றியதுதானேத் தவிர எங்கள் வழக்கு தொடர்பானது அல்ல. எங்களுடைய பின்னணியையே தேடுகின்றனர். வழக்கு நடந்துகொண்டிருக்கையில் இவ்வாறு செயற்படுவது எங்களுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதோடு மன உளைச்சலையும் தருகிறது."

மேலும், தான் வீட்டில் இல்லாத நேரத்தில் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் தனது வீட்டிற்குள் சிவில் உடையில் பொலிஸார் அதிகாரிகள் என கூறிக்கொள்ளும் ஒரு குழு வந்து, தனது பிள்ளைகளைத் திட்டி, அச்சுறுத்தியதாக காட்டும் சிசிடிவி காட்சிகளையும் அவர் ஊடகங்களுக்கு வழங்கியிருந்தார்.

சிசிடிவி காட்சிகளுக்கு அமைய, ஏப்ரல் 24 அன்று, மூன்று அதிகாரிகளும் சந்திரமோகன் சந்தியாவின் வீட்டிற்கு வந்து அவரது மகனிடம் அவரது தாய் எங்கே என கேட்கின்றார்கள்.

"அம்மா எங்கடா? அம்மா இல்லை அண்ணா. அம்மா வவுனியாவில்.... அடிச்சு மண்டைய உடைப்பேன். உங்களுடைய அம்மாவிற்கு கோல் பண்ணுடா. அம்மாவிற்கு சொல்லு பொலிஸ் வந்திருக்கு. எத்தனை மணியானாலும் நாங்கள் இருக்கின்றோம் என சொல்லு. நேற்று புல்லா வந்து பார்த்தால்... கோவம் வந்தால் தம்பி உன்னை தூக்கிப்போட்டு அடிப்பேன் விளங்குதா? செய்வது பிராடு வேலை, செய்துபோட்டு பதில் சொல்ல வேண்டும் விளங்குதா?"

"உங்கள் அம்மா ஏன் பொலிஸ் சென்று முறைப்பாடு செய்தார்? என்ன முறைப்பாடு? அந்த பிரச்சினை அடித்தேன் என, கோல் பண்ணி வரச்சொல்லு, வவுனியாவில் வாராங்க, யாழ்ப்பாணம் வாராங்க... வொரன்ட் இருக்கு கைது செய்வாங்க, வந்தால் பிரச்சினையில்லை. வாராட்டி கைது செய்ய வேண்டி வரும்."

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினரான சந்திரமோகன் சந்தியா, தனது கடத்தல் தொடர்பான நீதிமன்ற வழக்கு நிலுவையில் இருக்கும்போது, பொலிஸார் இந்த கடத்தல் குறித்து விசாரணை செய்யாமல் தனது கடந்த காலம் தொடர்பிலான தகவல்களை கேட்பதாக குற்றம் சாட்டுகிறார்.

மேலும், ஏப்ரல் 24 ஆம் திகதி தனது வீட்டிற்கு வருவதாக பொலிஸ் அதிகாரிகள் தனக்கு தொலைபேசியில் தெரிவித்தபோது, அன்றைய தினம் தான் வவுனியாவில் இருப்பதாகவும், வீடு திரும்பும்போது இரவு ஆகிவிடும் எனவும் தெரிவித்ததாகவும், ஆனால் அவர்கள் தனது வீட்டிற்கு வந்து தனது இரண்டு பிள்ளைகளை அச்சுறுத்தியதாகவும் சந்தியா மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# எம்மைவிட்டு அகலாத அன்புள்ளத்தின் 40ம் ஆண்டு நினைவலைகள் குடும்ப விருட்சங்கள்

## விரைந்தோடிய 57 ஆண்டுகள்

அன்னையாய் 02 -03-1935
ஆதியாய் 21-03-1968



**அமரத்துவமாது சத்தியசீலன் பரமேஸ்வரி**
**(ஐயனார் கோவிலடி சுருவில்)**

## விரைந்தோடிய 40 ஆண்டுகள்

அன்னையிடம் 25-12-1957
அநியாய அழிப்பில் 05-05-1985



**அமரர். சத்தியசீலன் சத்தியமூர்த்தி**
**(ஐயனார் கோவிலடி சுருவில்)**
**(கொழும்பு ஸ்ரீ திருப்பதி ஏஜன்சி)**

திதி: சித்திராபருவம் -11-07-2025

கண்திறவாக் கன்றுகளை கைவிட்டு சென்ற பசுவைப்போல்
உங்கள் பிரிவு இருந்ததாக அப்போது பேசிக்கொண்டவர்கள்
பருவத்தில் எம்மை பிரிந்து சென்றாலும்
இன்றும் உங்கள் வாழ்வின் சிறப்புக்களை மனங்களில் காவிக் கொண்டு
ஐம்பத்து ஏழு ஆண்டுகள் நகர்த்தி போய்விட்டது.
அம்மா என்று கதறிய காலம் போய் இன்னும் பல துன்பம் அடையாமல்
காத்தருள வேண்டுமம்மா............

அன்புச் சோதரா இன்பம், துன்பம் எது வந்தெதிர் கொண்டாலும்
வாழ்க்கையில் இரண்டும் ஒன்றென எதிர் கொண்டு
வாழ்ந்து காட்டி எங்கள் வாழ்விற்கு அடித்தளம் அமைத்து
சீரான வழி காட்டினாய் எப்படி மறப்போம் உன்னை
கொடியவர்களின் யாழ் கோட்டைக்கு முன்னால் பண்ணை வெளியைக் கடந்து
அன்னையின் நினைவு நாளில் சகோதர, சகோதரிகளுடன் உணவருந்த வந்த
உன்னை அந்த துப்பாக்கியால் கிழித்துப் போட்ட நாளை மறக்க முடியுமா!
துடித்தோம், அழுதோம், புரண்டோம். பாழாய்ப்போன துப்பாக்கி ஏந்திய
கொடியவர்களை நிந்திப்பதா இல்லை கடவுளை நோவதா
இப்போ நாம் அழுவதை நிறுத்திவிட்டோம்
புலம்புவதை நிறுத்திவிட்டோம், ஆனாலும் நினைப்பதை மட்டும் நிறுத்த முடியவில்லை.........

ஏங்கள் குடும்பத்தின் அன்புத் தெய்வங்களின் ஆத்மாக்கள் சாந்திபெற அன்பு பூ தூவி வணங்குகின்றோம்.

உங்கள் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
உன் பிரிவால் துயருறும் சகோதரிகள், மைத்துன, மைத்துனிகள், மக்கள்,
ருமக்கள், உறவினர், நண்பர்கள்.

மொன்றியல் நகரில்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

Trinity Thaiyal
Tailoring and Alteration Services
Mary James: (647) 467-1410
Located: Neilson and Sheppard
நாம் வழங்கும் தையல் சேவைகள்:
சாறி பிளவுஸ், சல்வார், லெங்கா, பாவாடை,
ஆண்களுக்குரிய ஆடைகள் தைத்தல் மற்றும் பல தையல்கள்
வேலைகள், அத்துடன் உங்கள் சேலைகள் அழகாக உடுக்கக்
கூடிய வகையில் Pleating செய்தல்
Instagram: @trinitythaiyal

உதயம் 1518 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 9, 2025

# President of the 'National Ethnic Press & Media Council of Canada Mr. Thomas Saras received a King Charles III's Coronation Medal



**President of the 'National Ethnic Press & Media Council of Canada Mr. Thomas Saras received a King Charles III's Coronation Medal from MPP Scarborough Agincourt Aris Babikian at the World Press Freedom Day Event, hosted by the 'National Ethnic Press & Media Council of Canada . MPP Scarborough Agincourt Aris Babikian had been an active Member of the Council many years ago and he is also the Parliamentary Assistant to Ontario Minister of Citizenship & Immigration, Hon. Graham McGregor. The Coronation Medal commemorates the Coronation of His Majesty King Charles III as King of Canada.**



## தனது "ஐயமிட்டுண்" உணவளிக்கும் திட்டத்தின் மூலம் அறியப்பெற்ற அவுஸ்த்திரேலியா வாழ் கொடையாளர் செல்வராஜாவிற்கு ஒன்றாரியோ பாராளுமன்றத்தில் வழங்கப்பெற்ற உயர் கௌரவம்

கடந்த பல வருடங்களாக தானும் தனது குடும்பத்தினரும் இணைந்து மேற்கொண்டு வரும் தனது "ஐயமிட்டுண்" உணவளிக்கும் திட்டத்தின் மூலம் நன்கு அறியப்பெற்ற அவுஸ்த்திரேலியா வாழ் கொடையாளர் செல்வராஜாவிற்கு ஒன்றாரியோ மாகாண பாராளுமன்ற வளாகத்தில் உயர் கௌரவம் வழங்கும் வகையில் அவரது யாழ்ப்பாண பல்கலைக் கழக சகாவும் நெருங்கிய நண்பருமான மாகாண அரசின் பாராளுமன்றச் செயலாளர் லோகன் கணபதி அவர்கள் ஏற்பாடுகளை கடந்த வாரம் செய்திருந்தார். (தொடர்ச்சி 19ம் பக்கம்)

## பன்முக ஆற்றலும் பக்குவமும் கொண்ட டாக்டர் சாம்பசிவ ஸ்ரீ சோமஸ்கந்த குருஜியின் கலை இலக்கியப் பங்களிப்புக்கு "மகுடம்" சூட்டிய நூல் வெளியீட்டு விழா



கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் பல பாகங்களிலும் அதனைத் தொடர்ந்து கனடாவிலும் தனது பன்முக ஆற்றலாலும் பக்குவமான அணுகலினாலும் ஆயிரக்கணக்கானவர்களைக் கவர்ந்தவர் நல்லூர் சாம்பசிவஸ்ரீ. சோமஸ்கந்த குருஜி அவர்கள். அன்னாரின் வில்லுப்பாட்டுத்துறையின் சாதனை, பாடும் திறன் முகபாவங்களைக் காட்டி சொற்களின் இறுக்கத்தை உயர்த்திக் காட்டுகின்ற நடிப்புத் திறன், கவிதைகள் மூலம் தனது சமூகத்தின் மீதான அக்கறையையும் இனத்தின் மீதான தேசியப் பற்றையும் காட்டும் கவிதைகளை வடித்தல் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்ட டாக்டர் சாம்பசிவஸ்ரீ. சோமஸ்கந்த குருஜி அவர்களின் கலை இலக்கியப் பங்களிப்புக்கு மகுடம் சூட்டும் வகையில் அமைந்த அவரது இரண்டு நூல்களின் வெளியீட்டு விழா கடந்த 3ம் திகதி சனிக்கிழமையன்று மாலை கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. (தொடர்ச்சி 16ம் பக்கம்)

## "ஈழத்தில் வாழும் ஒட்டு மொத்த தமிழர்களுக்குமான ஒரு அடையாளமாகவும் அதிகாரமாகவும் விளங்குகின்ற நல்லை ஆதினத்தை இதய சுத்தியுடன் பரிபாலனம் செய்தவர் இறைபதம் அடைந்த சுவாமிகள் அவர்கள்"




மறைந்த நல்ல ஆதின முதல்வர் ஸ்ரீல சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளிற்கான அஞ்சலி நிகழ்வில் கனடா உதயன் பிரதம ஆசிரியர் புகழாரம்

"ஈழத்தில் வாழும் சைவப் பெருமக்களுக்கு மாத்திரமல்ல ஒட்டு மொத்த தமிழர்களுக்குமான ஒரு அடையாளமாகவும் அதிகாரமாகவும் விளங்குகின்ற நல்லை ஆதினத்தை இதய சுத்தியுடன் பரிபாலனம் செய்தவர் இறைபதம் அடைந்த சுவாமிகள் அவர்கள். அன்னாரது பணிக்காலத்தில் நல்லை ஆதினத்தை மக்கள் ஒரு மத பீடமாக மாத்திரம் பார்க்காமல் அதனை ஒரு சமூக பணியாற்றும் ஒரு உயர் பீடமாகவும் கணித்து வந்தார்கள்"

இவ்வாறு. மறைந்த நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளிற்காக கனடா ஸ்காபுறோ நகரில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் கனடா உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் புகழாரம் சூட்டினார். (தொடர்ச்சி 7ம் பக்கம்)

## ஸ்ரீ வரசித்தி விநாயகர் பிரதமகுரு பஞ்சாட்சர விஜயகுமாரகுருக்கள் அவர்களுக்கு "தருமைஆதீன சிவாகம கலாநிதி" விருது வழங்கி, கௌரவம்



தருமை ஆதீன குருமகா சந்நிதானம் அவர்களால் 04 -05-2025 அன்று ஞசுஆ பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 6வது உலக சைவசித்தாந்த மகாநாட்டில் கனடா ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தான பிரதமகுரு பஞ்சாட்சர விஜயகுமாரகுருக்கள் அவர்கள்.ஆற்றும் தமிழ், சைவ , வேதாகம நற்பணிகளை போற்றிப் பாராட்டி

"தருமைஆதீன சிவாகம கலாநிதி" எனும் கௌரவவிருது வழங்கி,தருமை குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளால் கௌரவ விருது வழங்கி, தங்கப்பதக்கம் அணிவித்தும் பொற்கிளி வழங்கியும் கௌரவிக்கப்பெற்றிருக்கிறார்.

தருமை ஆதீனம் ஏற்பாடு செய்த 6ஆவது உலக சைவசித்தாந்த மாநாடு சென்னை ஞசுஆ பல்கலைக்கழகத்தில் பல்லாயிரம் பார்வையாளர்களுடன் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

Matt Mathisayan
Sales Representative
647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on
HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8